உலகத் தமிழ் எழுத்தாளர்

யார் எவர்?

T17842
R005K07
T.17842

உலகத் தமிழ் எழுத்தாளர்
யார்? எவர்?

தொகுத்தோர்

ச. வே. சுப்பிரமணியன்
ந. கடிகாசலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
அடையாறு, சென்னை—600 020

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	—	Ulagat Tamiḻ Eḻuttāḷar Yār ? Evar ?
Editors	—	Dr. S.V. Subramanian M.A. Ph.D. Director, I.I.T.S, Madras-20. Dr. N. Ghadigachalam M.A. Ph.D. Senior Research Fellow, I.I.T.S. Madras-20.
Publication Number	—	15
Language	—	Tamil
Edition	—	March, 1980
Copyright	—	International Institute of Tamil Studies
Paper used	—	16 kg D/Demy Shesasayee
Size of the book	—	21 × 14 cms.
Printing types used	—	10, 12 points
Number of pages	—	VIII + 256
Number of Copies Printed	—	3000
Price	—	Rs. 6/-
Printers	—	Novel Art Printers, Madras-14.
Binding	—	Card Board
Artist	—	Amudhone
Publisher	—	International Institute of Tamil Studies, Madras-600 020
Subject	—	Particulars of World Tamil Writers

முகவுரை

உலக நாடுகள் பலவற்றிலும் வாழ்ந்துவரும் தமிழ் எழுத்தாளரைப் பற்றிய முழுவிவரங்களையும் தொகுத்து நூல் வடிவில் தந்தால் அது மிக்க பயனுடையதாக விளங்கும் என்ற எண்ணத்தின் விளைவே இந்நூல். இந்நூலின்கண் 1443 தமிழ் எழுத்தாளரைப் பற்றிய விவரங்கள் தரப்பெற்றுள்ளன.

'உலகத் தமிழ் எழுத்தாளர் யார் எவர்?' என்னும் தலைப்பில் தமிழ் எழுத்தாளரைப் பற்றிய விவரங்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுக்க முற்பட்டபோது பல்வேறு நாளேடுகள் மற்றும் வார இதழ்கள் ஆகியவற்றில் இதுபற்றிய செய்தி வெளியிடப்பெற்றது. இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளின் தமிழ் நாளேடுகளும் இச்செய்தியை வெளியிட்டு உதவின. இச்செய்தியைக் கண்ணுற்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு விண்ணப்பித்த எல்லோருக்கும் அச்சிட்ட படிவங்களை அனுப்பி வைத்தோம். அப்படிவங்களை முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து அனுப்பிய எழுத்தாளர் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. எனவே, ஏதேனும் ஒரு நூல் எழுதியவர், அல்லது கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் ஆகியவற்றில் ஏதேனும் 15 அச்சில் இடம் பெற்ற எழுத்தாளர் ஆகியோரை மட்டுமே இந்நூலில் சேர்ப்பது என முடிவெடுக்கப்பட்டது.

இந்நூலுக்கு விவரங்களை அனுப்புவதில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர் மிக்க ஆர்வம் காட்டினர். ஆனால் தமிழகத்தில் வாழும் எழுத்தாளர் அத்தகைய ஆர்வம் காட்டவில்லை அதுமட்டுமின்றி, பிரபல எழுத்தாளர் தங்களைப் பற்றிய விவரங்களைத் தாமாக

அனுப்பவில்லை; நிறுவனமே படிவங்களை அவர்களுக்கு அனுப்பி வைத்தும் அவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவில்லை. எனினும், ஒரு சிலரின் விவரங்களைச் சேகரித்து இந்நூலில் இடம் பெறச் செய்துள்ளோம்.

தங்களோடு தொடர்புடைய எழுத்தாளரின் முகவரிகளைத் தெரிவிக்குமாறு பல நூல் வெளியீட்டாளரைக் கேட்டிருந்தோம். உரிய நேரத்தில் பலரும் உதவினர். தனிப்பட்ட ஒரு சிலர் குறிப்பிட்ட அப்படிவங்களைப் பல பிரதிகள் அச்சிட்டு இலங்கை வாழ் தமிழ் எழுத்தாளருக்குக் கொடுத்து உதவினர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் இவ்வகையில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளருக்குப் படிவங்களை அனுப்பிவைத்துப் பேருதவி புரிந்தது. அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எழுத்தாளரின் பெயரை அடுத்துப் புனை பெயர் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. எழுத்தாளரின் படைப்பினைப் புதினம், சிறுகதை, நாடகம், கவிதை எனப் பலவாறாகப் பிரித்து வரிசைப் படுத்தியுள்ளோம். நூல் வடிவில் வெளிவராத படைப்பினைப் 'பல சிறுகதைகள்' 'பல கவிதைகள்' எனக் குறிப்பிட்டுள்ளோம். பல எழுத்தாளர் தம் படைப்பின் எண்ணிக்கையை மட்டுமே தந்துள்ளனர்; தலைப்பினைத் தரவில்லை.

அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர் பற்றிய விவரங்களும் கிடைத்திருப்பின் இந்நூல் முழுமை அடைந்திருக்கக்கூடும். இனி வெளிவரவிருக்கும் ஆங்கில நூலில் அவை இடம் பெற முயற்சி மேற்கொள்வோம்.

தமிழ் எழுத்தாளர் பற்றிய உத்தேசப் பட்டியல் வருமாறு:

தமிழகம்

மாவட்ட வாரியாக

1.	சென்னை	375	9.	தஞ்சை	55
2.	திருச்சி	95	10.	வடார்க்காடு	42
3.	மதுரை	86	11.	குமரி	39
4.	சேலம்	70	12.	செங்கை	24
5.	கோவை	67	13.	பெரியார்	12
6.	நெல்லை	66	14.	தருமபுரி	8
7.	தென்னார்க்காடு	63	15.	புதுக்கோட்டை	7
8.	இராமநாதபுரம்	60	16.	நீலகிரி	6

இந்தியப் பிற மாநிலங்கள்

1.	கருநாடகம்	20	7.	அஸ்ஸாம்	1
2.	பாண்டிச்சேரி	20	8.	உ. பி.	1
3.	கேரளம்	15	9.	குஜராத்	1
4.	புதுதில்லி	8	10.	பஞ்சாபு	1
5.	ஆந்திரம்	6	11.	மே. வங்காளம்	1
6.	மகாராஷ்டிரம்	4			

பிற நாடுகள்

1.	இலங்கை	142	7.	பர்மா	5
2.	மலேசியா	114	8.	மோரிசியசு	2
3.	சிங்கப்பூர்	13	9.	ஆஸ்திரேலியா	1
4.	அந்தமான்	4	10.	இந்தோனேசியா	1
5.	இங்கிலாந்து	3	11.	ஜப்பான்	1
6.	தென் ஆப்பிரிக்கா	3	12.	பிரான்சு	1

ஏறத்தாழ மூவாயிரம் தமிழ் நூல்கள் பற்றிய செய்தி இந் நூலில் இடம் பெற்றுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படுவதற்கும், முறையான தமிழ் இலக்கிய வளர்ச்சியை அறிந்துகொள்ளவும் இது பயன்படும் என நம்புகிறோம்.

ச. வே. சுப்பிரமணியன்

ந. கடிகாசலம்

சுருக்க விளக்கம்

அ—தொழிலும் முகவரியும்

ஆ—பிறந்த நாளும், முதல் நூல் அச்சில் வந்த ஆண்டும்

இ—அறிந்த பிறமொழிகள்

ஈ—நூல்கள்

உ—நூல்களுக்காகப் பெற்ற பரிசுகள், பட்டங்கள்

ஊ—வேறு சிறப்புச் செய்திகள்

எ—சென்று வந்த நாடுகள்

(அ)	அறிவியல்	(சி)	சிறுகதை
ஆ)	ஆராய்ச்சி	(த)	தத்துவம்
(ஆசி)	ஆசிரியம்	(தொ)	தொகுப்பு
(இ)	இலக்கணம்	(நா)	நாடகம்
(க)	கட்டுரை	(ப)	பதிப்பு
(கா)	காவியம்	(பு)	புதினம்
(க.நா)	கவிதை நாடகம்	(மொ)	மொழிபெயர்ப்பு
(கவி)	கவிதை	(மொழி)	மொழியியல்
(கு)	குழந்தை நூல்	(வ)	வரலாறு
(குறு)	குறுநாவல்	(வி)	விளக்க உரை

உலகத்
தமிழ் எழுத்தாளர்
யார் - எவர்?

1. அக்கப்பன், க. ர. (ஈரோட்டான்)

அ : தமிழ்த் துணைப்பேராசிரியர், சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு-638 004 ஆ : 6-6-1926; 1947. இ : ஆங்கிலம்; ஈ : (நா) குந்தவை. (க) மகாபாரத ஆய்வுக் கட்டுரைகள், நாடகமேத்தும் நாடகக் கணிகை போன்ற பல கட்டுரைகள்.

2. அக்கீம், எம். ஐ. ஏ., (குன்றூரான்)

அ : தலைமையாசிரியர்; 46, புதுத்தெரு, திருச்செங்கோடு அஞ்சல், சேலம் மாவட்டம். ஆ : 20-9-1940; 1966. இ : ஆங்கிலம், தமிழ். ஈ : (சி) கோழை, ஊன்றுகோல் முதலிய 25 சிறுகதைகள்.

3. அகத்தியலிங்கம், ச.

அ : இயக்குநர், மொழியியல் உயர் ஆய்வுத்துறை, அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்-608 101. ஆ : 19-8-1929; இ : ஆங்கிலம், மலையாளம்; ஈ : (மொழி) உலக மொழிகள் - நான்கு பாகங்கள், தமிழகப் பழங்குடி மக்கள், தொல்காப்பிய மொழியியல், Language of Tamil Inscriptions 1250-1350 A.D, Bibliography of Dravidian Linguistics, Dravidian Linguistics. (இ) Generative Grammar of Tamil, இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்.

4. அகமது தெளபீக்கு, அ. யா. (கபூர்தாசன்)

அ : 12, மேற்கு மேலத் தெரு, கீழக்கரை - 623 517; ஆ : 18-8-1960; 1972. இ : ஆங்கிலம், அரபி. ஈ : (கவி) நாயகமாலை. உ : பாலகவி, கவிச்செல்வன். ஊ: கூடைப்பந்து வீரர்.

5. அகஸ்தியர், எஸ். (குறுமுனி)

அ: பண்டசாலையாளர்; 'அன்னை இல்லம்', கீரிமலை, இலங்கை. ஆ : 30-8-1926; 1947. இ : ஆங்கிலம், சிங்களம். ஈ : (சி) 250க்கு மேற்பட்ட சிறுகதைகள். (பு) ஒன்பது புதினங்கள்.

6. அகஸ்தியன் திரியேகதாசன்.

அ: சிறப்பு அலுவலர், உணவுப் பொருள் வழங்குதுறை, சென்னை; 18, திருநாவுக்கரசு முதலி தெரு, பெரம்பூர், சென்னை—

600 011; ஆ : 25-8-1946; 1970. இ : ஆங்கிலம். ஈ : (க) உங்கள் முன்னேற்றத்தில் வங்கிகளின் பங்கு. ஊ : தமிழ்நாடு ஜூடோ கழக அமைப்பாளர்.

7. அகிலாண்டம், பி. வி. (அகிலன்)

அ : அமைப்பாளர், சொற்பொழிவுத்துறை, அகில இந்திய வானொலி நிலையம், சென்னை; 13, கஸ்டியன் பீச் தெரு, சாந்தோம், மயிலாப்பூர், சென்னை - 600 004. ஆ : 27-6-1922; 1938. இ : ஆங்கிலம். ஈ : (பு) பெண், இன்பநினைவு, துணைவி, சிநேகிதி, நெஞ்சின் அலைகள், அவளுக்கு, வாழ்வு எங்கே? பாவை விளக்கு, வேங்கையின் மைந்தன், புதுவெள்ளம், பொன்மலர், கயல்விழி, சித்திரப்பாவை, கொள்ளைக்காரன், வெற்றித் திருநகர், எங்கே போகிறோம்? பால்மரக் காட்டினிலே. (சி) சக்திவேல், நிலவினிலே, அமராவதிக் கரையில், ஆண் - பெண், செங்கரும்பு, வழிபிறந்தது, குழந்தை சிரித்தது, மின்னுவ தெல்லாம், சாந்தி, சகோதரர் அன்றோ? ஒரு வேளைச் சோறு, நெல்லூர் அரிசி, எரிமலை, சத்திய ஆவேசம், பசியும் ருசியும், விடுதலை, வேலியும் பயிரும். (க) கதைக்கலை, கலையும் வயிறும், சோவியத் நாட்டில், வெற்றியின் ரகசியங்கள்; (நா) வாழ்வில் இன்பம். (கு) நல்ல பையன், கண்ணான கண்ணன், தங்க நகரம், சிகப்பு விளக்கு. (மொ) மாபசான் கதைகள், விஷகன்னிகை, எழுதாத கதை, தாகம். உ : கலைமகள் நாவல் பரிசு, தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, சாகித்ய அகாதமிப் பரிசு, தமிழ் வளர்ச்சித் துறைப் பரிசு, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு, பாரதீய ஞானபீடப் பரிசு, சோவியத்நாடு நேரு பரிசு; ஊ : இந்திய மொழிகள் பலவற்றிலும், ஆங்கிலம், ருஷ்யன், ஜெர்மனி, போலிஷ் மொழிகளிலும் இவருடைய கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எ : சோவியத் ருஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை.

8. அசோகன், மா.

அ : 1-18ஏ, கச்சநகரம், கச்சனம் - 610201. ஆ : 15-5-1956; 1969. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : (க) மு. வ. காட்டிய வாழ்வு.

9. அசோகாம்பிகை, இ. (மண்டூர் அசோகா)

அ : ஆசிரியை; மண்டூர், மட்டக்களப்பு, இலங்கை. ஆ : 2-3-1949; 1966. ஈ : (சி) கொன்றைப் பூக்கள். உ : இலங்கை கலாச்சாரப் பேரவையின் 1976ம் ஆண்டு சிறந்த நூலுக்கான

பரிசு. ஊ : இலங்கை வானொலி, சஞ்சிகைகளில் மெல்லிசைப் பாடல்கள், சிறுகதை, கவிதை, நாடகம் வெளியாகியுள்ளன.

10. அடைக்கலம், சொ. (தரந்சம்)

அ : எழுத்தாளர்; 1, முதற் சந்து, அவதானப் பாப்பையர் ரோடு, சூளை, சென்னை - 600 007. ஆ : 5-11-1932; 1948. இ : ஆங்கிலம். ஈ : (கு) கதைக்கொத்து.

11. அடைக்கலம், பழ. (தமிழ்ப்பாணன்)

அ : ஆசிரியர்; 111, ஜாலான் ஒங்சியோங், தங்கா அஞ்சல், ஜோகூர், மலேசியா. ஆ : 11-10-1943; 1955. இ : மலாய், ஆங்கிலம். ஈ : (கு) சிறுவர் கதைக் கொத்து, மழலைப் பாடல், குழந்தைக் கதைகள், விசித்திரத் தீவுகள், அறிவூட்டும் சிறு கதைகள், பழமொழி விளக்கும் கதைகள், மலேசிய நாட்டு விடுகதைகள், நமது தேசிய மலர். எ : இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து.

12. அண்ணாமலை, அ. (ஆராய்ச்சி)

அ : ஆசிரியர்; 33, செங்குந்தர் வீதி, ஈரோடு – 638 001. ஆ : 1-4-1932; 1960. இ : தமிழ், ஆங்கிலம், இந்தி. ஈ : (வ) தமிழகத் தவப்புதல்வர் வரலாறு.

13. அண்ணாமலை, ஜ. (மலையாளி)

அ : துணைப்பேராசிரியர்; 11, முதல் நெடுஞ்சாலை, கிழக்கு செனாய் நகர், சென்னை - 600 030. ஆ : 15-6-1939; 19(2. இ : ஆங்கிலம், இந்தி. ஈ: (க) முல்லைத் திணை முதலிய பல ஆய்வுக் கட்டுரைகள்.

14. அண்ணாமலை, சுப.

அ : பேராசிரியர்; 98, அறிஞர் அண்ணா நகர், மதுரை 625 020. ஆ : 2-10-1929; 1952. இ : ஆங்கிலம், வடமொழி ஈ : (க) உருவும் உணர்வும், The Life and Teachings of Saint Ramalingar. எ : மலேசியா, சிங்கப்பூர்.

15. அண்ணாமலை, ம. சு. (சோமசன்மா)

அ : தலைமையாசிரியர்; தே. மா. ஆ. பா (தமிழ்), சிரிகாடிங் தோட்டம், பத்துபகாட். ஆ : 5-4-1925; 1950; இ : ஆங்கிலம், மலாய், ஜப்பான். ஈ : (க) மகிழம்பூ. உ : மலேசியக் கவியரசு, கவிச்சுடர். எ : இந்தியா.

16. அண்ணாமலை, மா. சி. (இராவணன்)

அ : பத்திரிகை ஆசிரியர்; 10 ஜாலான், 11பி, செலயாங் பாரு, பத்துமலை, குவாலலும்பூர். ஆ : 5-2-1930; 1949. இ : ஆங்கிலம், மலாய், ஜப்பான். ஈ : (க) பல கட்டுரைகள். எ : தாய்லாந்து, நிக்கோபார்த் தீவு, பிரிட்டிஷ் நார்த்போர்னியோ.

17. அத்தியப்பா, ஆர்.

அ : மூணுசாவடி., பாச்சல் அஞ்சல், புதுச்சத்திரம் - 637 018. ஆ : 6-7-1910; 1928. இ : ஆங்கிலம் ஈ : பல கதை, கட்டுரைகள். ஊ : சர்வோதய எழுத்தாளர்.

18. அநவரத விநாயகமூர்த்தி, வை. (இணுவை மூர்த்தி)

அ : நிர்வாக அதிகாரி, தமிழ்ப்பிரிவு, கல்வி அமைச்சு, கொழும்பு - 2, இலங்கை; கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ : 31-8-1923; 1940. இ : ஆங்கிலம், சிங்களம், இலத்தீன். ஈ : (க) நவராத்திரியும், கலைமகள் வழிபாடும், கல்விச் செல்வி, நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை. எ : இந்தியா.

19. அந்தனி ஜீவா (கவிதா)

அ : பத்திரிகை நிருபர்; 57, மகிந்த பிளேஸ், கொழும்பு - 6 இலங்கை. ஆ : 26-5-1947; 1963. இ : ஆங்கிலம், சிங்களம். ஈ : (கு) இராஜாந்தி. எ : இந்தியா.

20. அந்தாலன், மு. (எழில்)

அ : வேளாண்மை; க. அளம்பளம் 2. அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம், தென்னார்க்காடு மாவட்டம். ஆ : 15-6-1936; 1954. இ : ஆங்கிலம். ஈ : (சி) காந்தியத்தின் கடைசிப் பயணம். (பு) போராட்டங்கள்.

21. அந்தோணி தேவதாஸ்.

அ : புகைப்படப்பிடிப்பாளர் - நிருபர்; 10, ஜாபான் பெர்சாத்து, பெட்டாலிங் ஜெயா, சிலாங்கூர், மலேசியா. ஆ : 29-3-1931; 1956. இ : ஆங்கிலம், மலாய். ஈ: பல கட்டுரை, நாடகம், சிறுகதைகள். எ : இந்தியா.

22. அநுமந்தன், கி. ர.

அ : பேராசிரியர்; 41, சீதம்மா காலனி, சென்னை-600 018. ஆ : 25-7-1922; 1960. இ : ஆங்கிலம். ஈ : (வ) பிரிட்டன்

வரலாறு, இந்திய வரலாறு - கி. பி. 1206 வரை, கிரேக்க வரலாறு, உலக நாகரிகத்தின் வரலாறு. (மொ) இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி வரலாறு, அரசியலமைப்புச் சட்டத்துக்கோர் அறிமுகம்.

23. அப்துர் ரவூஃப், என். எம். (கருணாமணாளன்)

அ : மேற்பார்வையாளர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி விடுதி, ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011. ஆ : 5-5-1934; 1949. இ : அரபி, சிங்களம், ஆங்கிலம். ஈ : (சி) கனி ரசக் கதைகள் மற்றும் 600 சிறுகதைகள். உ : நெடுங்கதை நாயகன். எ : இலங்கை.

24. அப்துல் கறீம், ஆர். (சித்தன்)

அ : வியாபாரம்; 117 எப், ஜாலான் துங்கு, ஜெலுத்தோஸ், பினாங்கு, மலேசியா. ஆ : 1916; 1936. இ : மலாய், ஆங்கிலம். ஈ : (கவி) ஒளி பிறந்தது, இஸ்லாமியப் பாடல்கள் - இரண்டு தொகுதிகள். உ : கன்னல் கவி, கவிதாமணி.

25. அப்துல் காதர், கா.

அ : வியாபாரம்; 1ஏ, நெடுஞ்சாலை, லாபு அஞ்சல், நெகிரி செம்பிலான், மேற்கு மலேசியா. ஆ : 17-5-1940; 1964. இ : ஆங்கிலம், மலாய். ஈ : (சி) ஐம்பது (நா) முப்பதுக்கும் மேல்.

26. அப்துல் முத்தலீப், சு. (பரிதாமணாளன்)

அ: 'தமிழ்நேசன்' துணையாசிரியர்; 162—6டி, ஜாலான், பொக்கிலிங் பிளாட்ஸ், ஜி. பிளாக், குவாலலம்பூர். ஆ: 10. 8. 1935; 1952. இ: மலாய், ஆங்கிலம் ஈ: (தொ) மலாயாவில் தமிழ்க் கவிதைகள்.

27. அப்துல் ரகிமான், கே. எஸ். (இடிமுரசு)

அ: கலைத்துறை; 3, மயிலாப்பூரான் தெரு, இராயப் பேட்டை, சென்னை—600014. ஆ: 3-6-1935; 1958. இ. ஆங்கிலம், மலையாளம். ஈ: (சி) சின்னமாமி, தமிழாரம் மற்றும் பல கதைகள். (கவி) இடிமுரசின் கவிதைகள்.

28. அப்துல் லத்தீப், சா. லெ. (இசைவாணன்)

அ: வியாபாரம்; அல்ஹம்றா வீதி மருதமுனை - 2, இலங்கை, ஆ: 12-1-1940; 1953. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (க) சூறாவளி

(சி) முதலிரவு. ஊ: பெருநாள் பரிசு என்னும் இவருடைய நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

29. அப்துல்காதர் லெப்பை (அதான்)

அ: 50, ஆமன் கோணர், மட்டக்களப்பு, இலங்கை. ஆ: 7-9-1915; 1942. இ: ஆங்கிலம், அரபு, உருது. ஈ: (கவி) இக்பால் இதயம், ருபையாத், இறசூல் சதகம், செயினம்பு நாச்சியார் மான்மியம், தஸ்தகீர் சதகம், முறையீடும் தோற்றமும், மெய்நெறி, கார்வான் கீதம். உ: ஆசிரியர் திலகம், கவிஞர் திலகம்.

30. அப்துல் ஜப்பார், அர.

அ: துணைப்பேராசிரியர்; 25, கீழக் குசத் தெரு, பீமநகர், திருச்சி—620 001. ஆ: 16-8-1937. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

31. அப்துல் ஜப்பார், ந. பா. (அபின்)

அ: எழுத்தாளர்; 30, புர்ரா சாஹிப் தெரு (2வது மாடி) சென்னை—600 002. ஆ: 16-8-1939; 1939 இ: ஆங்கிலம், உருது. ஈ: (பு) ஷஜருத்துர். (வ) நபி பெருமானார் வரலாறு. (வி) சிதம்பரேசுவரர் விறலி விடுதூதுக்கு விளக்க உரை. எ: மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பாகிஸ்தான்.

32. அப்துஸ் ஸமது, அ. ஸ. (அன்பு. இறைதாசன்)

அ: விரிவுரையாளர்; அக்கரைப்பற்று இ. பி. இலங்கை. ஆ: 7-9-1929; 1947. இ: சிங்களம். ஈ: (சி) எனக்கு வயது பதின் மூன்று, பிறைப் பூக்கள். (கவி) முற்றத்து மல்லிகை. (வி) சீறா இன்பம், சுலைமான் பல்கீஸ். எ: இந்தியா.

33. அப்துஸ் ஸுபுஹான்

அ: எழுத்தாளர்; ஒரே உலக பதிப்பகம், கீராநல்லூர் அஞ்சல், சீர்காழி வட்டம், தஞ்சை மாவட்டம். ஆ: 1923; 1937. இ: ஆங்கிலம், இந்தி, அரபி, மலையாளம். ஈ: (பு) கலாவதி, நான் மனிதனானேன். (நா) உலக ஜோதி. (கு) இளைஞர் இதய இயக்கம், இளைஞரியல்பு இலக்கியம். (க) குடியரசின் உண்மைப் பிரதிநிதிகள்.

34. அபுபக்கர், மொ. (அனீபா)

அ. ஓட்டுநர்; 51, ஜலான் பதாங் தெம்பக், பாது 4½, ஜலான் மெர்சிங், குளுவாங், ஜோஹூர். ஆ: 23-6-1939; 1970. ஈ: பல சிறு

கதைகள், கவிதைகள். ஊ: முதல் கதையைத் தமிழ்நேசன் 'சிறந்த தத்துவ எழுத்து' எனப் பாராட்டியது. எ: சிங்கப்பூர்.

35. அபுபக்கர், எ. எம். (டாக்டர் அகர்)

அ: மருத்துவர்; காத்தான்குடி கிளினிக், காத்தான்குடி—2, இலங்கை. ஆ: 15-10-1945; 1961. இ: ஆங்கிலம் ஈ: (கவி) கவிதாஞ்சலி, மதுக்கலசம். (க) பரீட்சைகளில் சித்தி பெறுவ தெப்படி? அறிவுத் துறையில் முஸ்லிம்கள், பாலியற் பிரச்சினை கள். (வ) இஸ்லாமிய வரலாறு—இரண்டு பாகங்கள். உ: கவிதாஞ் சலி நூலுக்காக 'வித்தியா ரத்தினம்'. எ: இந்தியா.

36. அம்பிகை பாகன், ச.

அ: மணிமனை, மல்லாகம், இலங்கை. ஆ: 3-5-1908; 1935. இ: ஆங்கிலம். ஈ: (வ) யோகசுவாமிகள், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி. (க) இலங்கையில் சுவாமி விவேகானந்தர், விபுலா நந்தர் உள்ளம், Some Landmarks in the History of Tamil Literature in Ceylon. எ: இந்தியா.

37. அமரசிங்கம், க. (ஆரையூர் அமரன்)

அ: ஆசிரியர்; ஆரையம்பதி-3, காத்தான்குடி, இலங்கை: ஆ: 9-4-1926; 1945. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (சி) அனுப்பாத கடிதம் முதலிய கதைகள். குழந்தைகளுக்கான பல கவிதைகள்.

38. அமலன், எஸ். பி. (மலர்மகன்)

அ: ஆசிரியர்; காந்திநகர், பெரம்பலூர்—621 212. ஆ. 30-11-1934; 1951. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: (சி) விடாதேபிடி, ஓடிப்போ. (பு) இருமலர்களில் ஒருமலர். (கவி) பக்திப் பத்து, என்றும் பதினாறு, முருகு முப்பது, காந்தி நாற்பது, திருமுறை அறுபது, குறளதிகாரம், நன்றிக்கடன். உ: இறையருட் கவிமணி, மரியன்னைக் கவிஞர். எ: இலங்கை.

39. அமிர்தலிங்கன், பூ. (மலரமுதன்)

அ: துணைப்பேராசிரியர்; 5, சாச் இரண்டாம்வீதி, புதுநகர், காரைக்குடி - 623001; ஆ:5-7-1920; 1950. இ: ஆங்கிலம். ஈ: (க) வள்ளுவர் கண்ட உயிரினங்கள், கருத்தும் கற்பனையும். (கவி) கவியரங்கில் மலரமுதன். உ: கவிஞர்கோ.

40. அமிர்தவல்லி, கோ. (அமிர்தம் சோமசன்மா)

அ: மே/பா. ம. சு. அண்ணாமலை, தே. மா. ஆரம்ப பாட சாலை (தமிழ்), சிரிகாடிங் தோட்டம், பத்துபகாட், ஜோகூர்,

மலேசியா. ஆ: 21-11-1934; 1960. ஈ: (சி) பல சிறுகதைகள். எ: சிங்கப்பூர், இந்தியா.

41. அமுதலிங்கம், வே. (அமுதன்)

அ: எழுது வினைஞர்; மாவெழு ஒழுங்கை, குரும்பசிட்டி மேற்கு, தெல்லிப்பனை, இலங்கை. ஆ: 30-10-1938; 1953. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (சி) வைகறை, மாரீசம். (நா) அறுவடை. எ: இந்தியா.

42. அமுதன், ச.

அ: வேளாண்மை; 135, தெற்கு ரத வீதி, திருவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம். ஆ: 18-1-1939; 1957. இ: ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி. ஈ: (சி) அமுதனின் சிறுகதைகள்.

43. அமுதாம்பிகை, க. (அமுதா கந்தசாமி)

அ: ஆசிரியை; 13, உப்பளத் தெரு, செய்யூர்—603 302. ஆ: 11-7-1937; 1955. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: பனிநீர்ப்பூ, சிலிர்ப்பு முதலிய பல சிறுகதைகள்.

44. அய்யாக்கண்ணு, மு. (அய்க்கண்)

அ: துணைப்பேராசிரியர்; பி7, ஆசிரியர் குடியிருப்பு, ஆ. பி. சீ. அ. கல்லூரி, திருப்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம். ஆ: 1-9-1935; 1956. இ: ஆங்கிலம். ஈ: (பு) உயிர், இளவெயினி (சி) வேர். உ: கல்கி சிறுகதைப் போட்டியில் முதல்பரிசு, அமுதசுரபி சிறுகதைப் போட்டியில் பரிசு, வான்மதி சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு, தினமணி கதிர் சரித்திர நாவல் போட்டியில் பரிசு, அமுதசுரபி குறுநாவல் போட்டியில் பரிசு, தினமணி கதிர் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு. ஊ: ஒரு கதை கன்னடத்திலும், ஒருகதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எ: மலேசியா, சிங்கப்பூர்.

45. அய்யாசாமி, சி. (வெற்றிவீரன்)

அ: அஞ்சல் ஊழியர்; 66, அரிஜனர் தெரு, திருச்சிப் பாளையம், சேலம்—636 001. ஆ: 15-2-1934; 1950. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: (சி) நினைவு. (க) விடுதலை இந்தியா. உ: தத்துவக் கவிஞன்.

46. அய்யூப், அ. (நீடூர் அயூப்)

அ: மாணிக்க வியாபாரம்; டி. எஸ். டி. த பை. 95144 கொலூன், ஹாங்காங். ஆ: 13-5-1949. இ: ஆங்கிலம் ஈ: பல

கட்டுரைகள், சிறுகதைகள். எ: இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, நார்வே, சுவீடன், நெதர்லாந்து பெல்ஜியம், இத்தாலி, டென்மார்க், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், மலேசியா, சிங்கப்பூர், துபாய், ஜோர்டான், பகரீன், இலங்கை.

47. அரங்கசாமி, மா. (இளங்கதிர்)

அ: ஆசிரியர்; மேலமங்கலம், வளையாம்பட்டு அஞ்சல், (வழி) பேரங்கியூர்—607 107. ஆ: 23-7-1929; 1953. இ: ஆங்கிலம். ஈ: (சி) சாந்தி. (நா) இளங்கோ. (க) போ.

48. அரங்கநாதன் (அகவழகன்)

அ: பத்திரிகை ஆசிரியர்; 12, பிள்ளையார் கோயில் தெரு; வன்னிய தேனாம்பேட்டை, சென்னை—600 018. ஆ: 1931; 1951. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (க) மொழியின் சிறப்பு.

49. அரங்கநாதன், பெ.

அ: தேனி வளர்ப்பு அதிகாரி; 52, இராசாசி சாலை, சேலம்-636 007. ஆ: 1-7-1941; 1960. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: பல கவிதைகள். உ: திருத்தொண்டர்.

50. அரங்கநாதன், ம.

அ: 55, சரசுவதி நகர், திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-607 002; ஆ: 13-6-1918; 1935. இ: ஆங்கிலம். ஈ: (சி) முத்தையனுக்கு வழி பிறந்தது. (கவி) வள்ளுவர் பேசுகிறார், இத்துவக்கும் இன்பம். (க) முதியோர் கல்வி முதல் நூல். உ: மாநில ஆசிரியர் விருது.

51. அரங்கராசன் (தென்றல்)

அ: ஆசிரியர்; 16, நிர்மலா நகர், பெரம்பலூர், திருச்சி மாவட்டம் - 621 212. ஆ: 16-11-1943; 1963. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள். உ: கவித்தென்றல்.

52. அரங்கராசன், இரா. (கோதை நாயகன்)

அ: துணைப் பேராசிரியர்; சுப்பிரமணியபுரம் அஞ்சல், கோயம்புத்தூர் - 641 040. ஆ: 18-8-1945; 1970. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: பல சிறுகதைகளும், கட்டுரைகளும்.

53. அரங்கன், கி.

அ: ஆராய்ச்சியாளர்; இந்திய மொழிகளின் மைய நிறுவனம, மைசூர்-570006. ஆ: 3-9-1942; 1965. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: (க) பல மொழியியல், இலக்கியக் கட்டுரைகள். (மொழி) மாற்றிலக்கண மொழியியல். எ: அமெரிக்கா.

54. அரசுமணி, க.

அ : ஆசிரியர்; 8, அவ்வை சண்முகம் சாலை 3வது சந்து, பாரதிதாசன் நகர், சென்னை-600 005. ஆ : 30-9-.930; 1953. இ: ஆங்கிலம். ஈ : (கு)கதைப் பூங்கா, போதனைக் கதைகள், உத்தமன் கதைகள், நன்னெறிக் கதைகள், தமிழ்மறைக் கதைகள், குறள் மணிக் கதைகள், கதைக் களஞ்சியம், கடமை உயர்வு தரும், அறியாமை நீக்கிய ஆசிரியர், வீரம் தந்த பரிசு (வி) திருக்குறள் எளிய உரை. (வ) விஞ்ஞான விற்பன்னர்கள், அரசியல் மேதைகள் தொழில் மேதைகள். (க) வள்ளுவர் தெள்ளமுது, தனிப்பாடல் கனிச்சுவை, இலக்கியம் படைத்த மேதைகள், சிலப்பதிகாரக் கதைகள், குறுந்தொகைக் கதைகள், நெடுந்தொகைக் கதைகள், கம்பன் கண்ட உலகியல், இலக்கியக் கதைகள், பதிற்றுப்பத்துக் கதைகள், கட்டுரைக் கரும்பு, ஒற்றுமையின் உயர்வு, வாழ்வியல். எ : இலங்கை.

55. அரசு மணிமேகலை

அ : துணைப் பேராசிரியை; பி 5, அரசு குடியிருப்பு, சிருங்கேரிமடம் சாலை, இராமகிருஷ்ணா நகர், சென்னை-600028. ஆ : 7-12-1944; 1960. இ : ஆங்கிலம், ஈ : (கவி) மழலைக் கவிதைகள், புரட்சிப் பூக்கள்.

56. அரணமுறுவல், ந. (செங்கோ)

அ : அச்சுத் தொழில்; 10, கள்ளுக்கடை மேடு, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600 018; ஆ : 21-10-1949; 1964. இ: ஆங்கிலம். ஈ : (தொ) ஆயிரம் மலர்கள்.

57. அரவிந்தன், மு. வை.

அ : துணைப் பேராசிரியர்; வளையாம்பட்டு, செங்கம் வட்டம், வடஆர்க்காடு மாவட்டம். ஆ : 10-6-1934; 1950. இ: ஆங்கிலம். ஈ :(சி) கூட்டுக்கு வெளியே. (கவி) வெள்ளை மலர்கள், அரவிந்தன் கவிதைகள்.(நா) சிலம்புச் செல்வி (கு) சிறுவர் உலகம் (க) உரையாசிரியர்கள், இலக்கியவானில் சிந்தாமணி, பிழையின்றி

எழுதுங்கள், திருக்குறளும் சங்க இலக்கியமும், பரணிக்கோர் சயங்கொண்டான், தமிழக நாட்டுப் பாடல்கள். (தி) திருவள்ளுவ மாலை, சிறுபாணாற்றுப்படை, இளங்கோ அடிகளின் நாடகத் திறன். (மொழி) மொழியியல் சிந்தனைகள்.

58. அரிஹரன், ஈ. எஸ். (ரேவதி)

அ : கண்காணிப்பாளர், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை; 6, அகத்தி முத்தன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. ஆ : 8-2-1935; 1952. இ : ஆங்கிலம். ஈ : (கு) நீலப் பெட்டி, பகையை வென்ற பல்லவன், கார் வண்ணன் கண்ட கனவு, பாண்டிய பரதன், கொடி காட்ட வந்தவன், சத்தியம் காத்தவன். உ : குழந்தை எழுத்தாளர் சங்க சிறுகதை, நாவல் போட்டிகளில் பரிசுகள், கண்ணன் தொடர்கதைப் போட்டிகளில் பரிசுகள். ஊ : குழந்தை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர்.

59. அருச்சுனன், வே. ம. (தமிழ்ச்செல்வன்)

அ : ஆசிரியர்; மிட்லண்ட்ஸ் தோட்டம், கிள்ளான். ஆ : 3-8-1948; 1961. இ : ஆங்கிலம், மலாய். ஈ : (சி) படித்தவளாம் படித்தவள். (பு) புதிய சகாப்தம்.

60. அருணகிநாயன், ஐ. (ஐ)

அ : மருத்துவர்; 13, இள மருத்துவர் இல்லம், அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை - 625 020. ஆ : 18-9-1950; 1958. இ : ஆங்கிலம். ஈ ; (நா) இருளின் கிரணங்கள். (கவி) பல கவிதைகள். உ : இளமணி, அருட்கவிச் செல்வர், ஆசுகவி.

61. அருணபாரதி, ந. (கலீலன்)

அ : ஆசிரியர்; 63, ஆசிரியர் மனை, காசி இந்துப் பல்கலைக் கழகம், வாரணாசி-5. ஆ : 15-6-1947; 1974. இ : ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு, சீனம். ஈ : சில கவிதைகள், சிறு கதைகள், திறனாய்வுக் கட்டுரைகள். (மொழி) Glossary of Linguistics (English - Tamil).

62. அருணாசலம், அ. ச. (மாத்தளை அருணேசர்)

அ : 753, மந்தண்டாவளை, மாத்தளை, இலங்கை. ஆ : 30-1-1905; 1924. இ : ஆங்கிலம், சிங்களம். ஈ : (க) ஒன்பது மணிகள். (வ) விஞ்ஞானக் கலையின் வரலாறு, சோதிடக்

கலையின் வரலாறு, வைத்தியக் கலையின் வரலாறு, தமிழ்மொழியும் தமிழ்நூற்களும் தோன்றிய வரலாறு. எ : இந்தியா.

63. அருணாசலம், ப.

அ : 40 ஏ, வெள்ளாளர் காலனி மேற்கு, இராமவர்மபுரம், நாகர்கோயில். ஆ : 1-11-1923; 1958. இ. - ஆங்கிலம், மலையாளம். ஈ : (க) கவியரசர் பாரதி, வீடணன், தெய்வ நாட்டம், குறளின் செய்தி, திருவெம்பாவை, சிலப்பதிகாரச் சிந்தனை, பக்தி இலக்கியம், தொல்காப்பியர். ஊ : மலேசியப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். எ : மலேசியா, சிங்கப்பூர்.

64. அருணாசலம், பூ.

அ : 162, கிளப்ரோடு, சுங்கை சிப்புட், பேராக், மலேசியா. ஆ : 4-8-1937, 1956. இ : ஆங்கிலம். ஈ : (தொ) பாவையின் பசி, பெண்மனம், திருவிளக்கு, போர்வீரன். (சி) நெஞ்சின் வேதனை. எ : இந்தியா, சிங்கப்பூர்.

65. அருணாசலம், மெ. (அருவி மைந்தன்)

அ : வணிக ஆய்வாளர்; 3/50, இலுப்பக்குடியார் தெரு, கோனாபட்டு - 622 503. ஆ : 7-1-1947; 1963. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : (கு) மழலை அமுதம். (கவி) ஒரு மொட்டு மலராகின்றது. ஊ : நாடக நடிகர், குழந்தை எழுத்தாளர் சங்க உறுப்பினர்.

66. அருணாச்லம், வ.

அ : ஆசிரியர்; 11, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 600 005. ஆ : 7-6-1919; 1961. இ : ஆங்கிலம். ஈ : (அ) ரேடியோ மெக்கானிசம், ரேடியோ ரிப்பேரிங், டிரான்சிஸ்டர் மெக்கானிசம், டிரான்சிஸ்டர் ரிப்பேரிங், டெலிவிஷன் டெக்னிக், ஆம்பிளிபயர் மெக்கானிசம்.

67. அருணாசலம், ஜி. (செம்பறவை)

அ : மருத்துவர்; 13, மார்க்கட் தெரு, ஜோலார்பேட்டை, வடார்க்காடு மாவட்டம். ஆ : 12-12-1920; 1947. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : (க) முதல் தாம்பூலம்.

68. அருணாசலம், ஏ. இ. (சாந்திமணாளன்)

அ : ஆசிரியர்; 4, சித்திரைத் தெரு, ஆழ்வார் திருநகரி, நெல்லை மாவட்டம். ஆ : 15-11-1937; 1962. இ : ஆங்கிலம், ஈ: (நா) வாஞ்சிநாதன்,

69. அருணாசலம், கே. எஸ். (இளசை அருணா)

அ : ஆசிரியர்; ஒட்டப்பிடாரம், (வழி) திருநெல்வேலி. ஆ : 1-7-1939; 1966. இ : இந்தி, ஆங்கிலம். ஈ : (க) 64 (கவி) 182 (சி) 32.

70. அருமைநாதன், அரு. (அருகன்)

அ : போர்மன்; 3, சோமசுந்தர விநாயகர் கோவில் இரண்டாவது தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. ஆ : 8-11-1927 1942. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : (க) ம. பொ. சி. கண்ட பாரதி, கிறிஸ்துவின் ஞான ஒளி, சிலம்பு கண்ட சிலுவை, திரு. வி.க. கண்ட கிறிஸ்து, அணையாத மெய்விளக்கு. உ: மக்கள் கவிஞர், கலைஞர், பக்தசிகாமணி.

71. அருமைராசன், ஐசக். (வாழியாதன்)

அ : துணைப் பேராசிரியர்; 8, கேசரி தெரு, நாகர்கோயில்-629 001. ஆ : 18-2-1939; 1959. இ : ஆங்கிலம். ஈ : (பு) சீறல்கள் (க. நா.) முல்லைமாடம், நெடுமான் அஞ்சி.

72. அருள், அ. (நவநீதன்)

அ : எழுத்தாளர்; 55ஏ, வெங்கடேசபுரம் காலனி, அயன்புரம், சென்னை – 600 023 ஆ : 1-8-2937; 1952, இ : ஆங்கிலம், மலையாளம். ஈ : பல கட்டுரைகள், கவிதைகள், கதைகள்.

73. அருள்சாமி, மு. சு. (புதியன்)

அ : துணைப்பேராசிரியர்; பி-11, இலயோலா ஆசிரியர் குடியிருப்பு, சூளைமேடு, சென்னை—600 094. ஆ : 28-10-1923; 1953. இ : இந்தி, ஆங்கிலம். ஈ :(சி) புறநானூற்றுச் சிறுகதைகள், ஈசாப் நீதிக்கதைகள். (நா) சேரிப் பெண், வாழ்வரசி. (வ) தமிழ் இலக்கிய வரலாறு. (க) நீதிநூல்கள், நீதிவெண்பா. (மொ) நான்கு நாடகங்கள். எ : இலங்கை.

74. அலி அகமது, அ. கா. (தமிழழகன்)

அ : வியாபாரம்; 2/17, ஹக் வீதி, மீனம்பூர்-604 205. ஆ : 20-4-1952; 1970. இ : தமிழ், இந்தி, ஆங்கிலம். ஈ : பல கவிதைகள், கதைகள், கட்டுரைகள். உ: கவிஞர்.

75. அவ்வையார் அழகப்பன் (குழலி)

அ : துணைப் பேராசிரியர்; கலைவாணர் தெரு, ஒழுகினசேரி, நாகர்கோவில். ஆ : 17-9-1936; 1950. இ : இந்தி, மலையாளம், ஆங்கிலம். ஈ : (க) பிறைநிலா, கருப்பும் கறுப்பும்.

76. அவினாசி முருகேசன்

அ. ஆசிரியர்; மே/ பா. ஆர். மீனாட்சி, தமிழ்நிதி, ஆரோவில் - 605 101. ஆ : 1-6-1947; 1961. இ : ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ : (பு) நீலக்கடல் அலைகள். பல கவிதை, கட்டுரைகள்.

77. அழகப்பன், ஆறு.

அ : துணைப் பேராசிரியர்; தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் - 608101 ஆ : 10-8-1937; 1954. இ : ஆங்கிலம். ஈ : (நா) சிரித்த மலர், மேடை நாடகங்கள், முத்துச் சிப்பி, திருமலை நாயக்கர், எள்ளல் நாடகங்கள், நாடகச் செல்வம், கறிவேப்பிலை, திருவள்ளுவர் நாடகம். (ஆ) தாலாட்டுக்கள் ஐநூறு, நாட்டுப் புறப் பாடல்கள் திறனாய்வு. (வ) டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார். உ : நாடகச் செம்மல்.

78. அழகப்பன், இராம. சுப. (அழகர்புரி அழகப்பன்)

அ : ஆசிரியர்; அமராவதிபுதூர் அஞ்சல் - 623301 ஆ : 27-4-1·37; 1958. இ : ஆங்கிலம். ஈ : (சி) சக்களத்தி. பத்திரிகைகளில் வெளியானவை 250க்கும் மேல். உ : சிறுகதைச் செம்மல். ஊ : திரைப்படத்துக்கு திரைக்கதை வசனம் எழுதியிருப்பதோடு நடித்துமிருக்கிறார்.

79. அழகப்பன், ந. (எழிலரசன்)

அ : ஆலை அலுவலர்; 8ஏ, சுந்தரராசபுரம், மதுரை-625011 ஆ : 30-10-1936; 1956. இ : ஆங்கிலம். ஈ : (சி) நுனிக்கரும்பு (நா) நாயகம் காப்போம், ஏமாற்றம் எல்லாம் எனக்குத்தானா? ஊ : பத்து ஆண்டுகள் தமிழ்நாடு என்னும் நாளிதழில் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர்.

80. அழகனார் (அன்பெழில்)

அ : சதர்ன் ரோடுவேஸ் லிமிடெட், கள்ளிக் கோட்டை - 673 002. ஆ : 30-6-1937; 1951. இ : ஆங்கிலம், மலையாளம். ஈ : (கு) கொக்கரக்கோ, சட்டமும் காசும்.

81. அற்புதராஜ், எஸ். (அருவி)

அ : ஆசிரியர்; 54சி—3, நியு காலனி, உறையூர், திருச்சிராப்பள்ளி - 620 003. ஆ : 10-7-1944; 1963 இ : ஆங்கிலம். ஈ : பல சிறுகதைகள், கவிதைகள்.

82. அறந்தை நாராயணன் (கல்பனா)

அ : எழுத்தாளர்;19-14,பீட்டர்ஸ் ரோடு காலனி,சென்னை-600 014. ஆ : 20-6-19.9; 1953. இ : ஆங்கிலம், மலையாளம். ஈ : (பு) ஜக்கா, சமூகசேவகி, கன்னியம்மன் கோயில், வாரந் தோறும் வயசாகிறது, ரத்தசாட்சிகள் ஜிந்தாபாத். (நா) மூர்மார்க்கெட், இன்குலாப் ஜிந்தாபாத். (வ) மாவீரன் பகத்சிங், பாலன், புரட்சிக் கவிஞர், சிவந்த விடியல். (க) நிஜங்கள்.

83. அறவாணன், க. ப.

அ: துணைப்பேராசிரியர்; பி. பி. 206, இபான், டாக்கர் பல்கலைக்கழகம், டாக்கர், செனெகல். ஆ: 9-௦-1941; 1959. இ: ஆங்கிலம், பிரஞ்சு. ஈ: (ச) அவள் அவன் அது, நீ ஒரு பண்புத் தொகை. (க) எழுநூறு ஆண்டுகளில் நன்னூல், அற்றைநாட் காதலும் வீரமும், கவிதையின் உயிர் உள்ளம் உடல், சைனர்தம் இலக்கண நன்கொடை, ஐந்திரம், கவிதை—கிழக்கும் மேற்கும். The Serpent Cult in Africa and Dravidian India, Research Papers on Tamilology. எ: பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, சுவிட்சர்லாந்து, இலங்கை, செனகல், காம்பியா, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், அமெரிக்கா, நைஜீரியா, செக்கோசுலோவாக்கியா.

84. அறவேந்தன்.

அ: வேளாண்மை; சித்துக்காடு, களத்தூர் அ. நி., பட்டுக் கோட்டை வட்டம் – 614 804. ஆ: 10-4-1949; 1967. இ: இந்தி: ஆங்கிலம். ஈ: (கவி) பொதுவுடைமைக் கவிதைகள். உ: கவிமுரசு, செஞ்சேனை.

85. அறிவழகன், ந. (அறிவுமதி)

அ: 70, கூந்தாலம்மா, சோனங்குப்பம், கடலூர்-607 003. ஆ: 22-9-1950; 1973. இ: ஆங்கிலம். ஈ: (ஆ) ஜெயகாந்தன் ஆய்வடங்கல். (கவி) புலம்பல்.

86. அறிவானந்தம், கே. பி.

அ: எழுத்தாளர்; 3பி, வேம்புலியம்மன் கோயில் தெரு, குன்றத்தூர், சென்னை-600 069. ஆ: 22-4-1942; 1962. ஈ: பல கவிதைகள். ஊ: மேடை நாடக ஆசிரியர், திரைப்பட கதை, வசன, பாடலாசிரியர்.

87. அறிவு ஒளி, தி. நா. (பூங்குன்றன்)

அ : தமிழாசிரியர்; 23, மந்தைவெளி தெரு, நால்வர் பேட்டை, திருக்கழுக்குன்றம் - 603 109 ஆ : 9-2-1934; 1948. இ : ஆங்கிலம். ஈ : (பு) உணர்வுகள் அழிவதில்லை. (வ) ஔவை துரைசாமியார் வாழ்க்கை வரலாறு.

88. அன்பரசன், மு. (மதிச்செல்வன்)

அ : தமிழாசிரியர்; 48, ஆதம் சாயபு தெரு, இராயபுரம், சென்னை - 600 013. ஆ : 21-2-1933; 1948. இ : ஆங்கிலம். ஈ : (இ) இளங்கோ இலக்கணப் பயிற்சி, இளங்கோ மொழிப் பயிற்சி, நக்கீரர் இலக்கணமும் கட்டுரையும். (சி) தேன்மலர்.

89. அன்பானந்தம், சி. (கேட்டை)

அ : வியாபாரம்; 31, பிஷப் தெரு, த. பெ. 322, பினாங்கு, மலேசியா. ஆ : 28-3-1932; 1949. இ : ஆங்கிலம், இந்தி, மலாய். ஈ : (கவி) ஆறுமுகன் அந்தாதி, ஆனைமுகன் அந்தாதி, முருகன் திருப்பெயர்ப் புகழ்மாலை. (கா) கிணற்றுத் தவளை, நந்தா விளக்கு, அழகோவியம். எ : இந்தோனேசியா.

90. அன்னி மிருதுலகுமாரி தாமசு.

அ: முதுநிலை ஆய்வாளர்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை - 600 020 ஆ: 2-3-1949; 1971. இ: இந்தி, மலையாளம், ஆங்கிலம். ஈ: (ஆ) பரிபாடலில் இயற்கை, Dissertation on Tamilology.

91. அனுராதா பாக்கியராஜன், (கலைமதி)

அ: களுவாஞ்சிகுடி, இலங்கை. ஆ: 23-2-1950: 1967. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

92. ஆடலரசு, எஸ். ஆர். வி.

அ : தமிழாசிரியர்; 19, இராமசாமி நகர், இராமநாதபுரம் கோவை - 641 018. ஆ : 15-6-1936; 1957. இ : ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ : (சி) அன்பின் விளையாடல், நல்ல முடிவு போன்ற பல சிறுகதைகள்.

93. ஆதித்தர், அ. கு. (கம்பர் அப்பர்)

அ : ஆசிரியர்: 32, சீனிவாசராவ் தெரு, மயிலை, சென்னை-600 004. ஆ : 21-12-1901; 1926. இ : ஆங்கிலம். ஈ : (க) கம்பர் கவியின்பம்.

94. ஆபிரகாம் அருளப்பன். (ஆஅன்ம்)

அ :13, தானியேல் தாமசு தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002. ஆ:13-4-1904; 1942. இ : ஆங்கிலம்; மலையாளம். ஈ : (இ) தொல்காப்பிய யாப்பு, தொல்காப்பியம்—சொல்லதிகாரம்-உரைக்கோவை. (வி) திருவாசகம் தெளிவுரை, திருமுருகாற்றுப்படை தெளிவுரை.

95. ஆரோக்கியசாமி, ச. (ஆசாமி)

அ : மின்சார வாரியப் பணியாளர்; 61, வடக்குத் தெரு, கருமண்டபம், திருச்சி-620001. ஆ: 2-10-1948; 1963. இ: ஆங்கிலம். ஈ: (சி) 100க்கு மேற்பட்ட சிறுகதைகள்.

96. ஆரோக்கியசாமி, ம.

அ : ஆசிரியர்; மட்டப்பாறை, (வழி) சோழவந்தான், மதுரை மாவட்டம். ஆ : 5-6-1937; 1954. இ: ஆங்கிலம். ஈ.: (க) மழலை இன்பம், மழலைச் செல்வம். உ: பைந்தமிழ்ப் பாவலர்.

97. ஆரோக்கியசாமி, எம். (இளங்கவின்)

அ : ஆசிரியர்; திருப்பாச்சேத்தி—623 610. ஆ: 15-8-1947; 19.5. இ: ஆங்கிலம். ஈ: முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள். உ: கவிமுரசு.

98. ஆலாலசுந்தரம், பூ.

அ: பேராசிரியர்; 5, பேராசிரியர் குடியிருப்பு, அகரம் சாலை, தாம்பரம், சென்னை-600059. ஆ: 5-11-1907;1933. இ: ஆங்கிலம். ஈ: (க) கட்டுரை விருந்து, இயற்றமிழ், இலக்கியச்சுவை. (வி) சென்னை கந்தகோட்டத் தலபுராணம். ஊ: சென்னைப் பல்கலைக்கழகச் செனட் சபைக்கும், சென்னை & மதுரைப் பல்கலைக்கழகக் கல்வித் திட்டக் குழுவிற்கும் உறுப்பினராகத் தமிழக ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டவர். எ: இலங்கை, நேபாளம்.

99. ஆறுமுகம், இல.

அ: 25பி, சமுத்திர குளத் தெரு, வல்லம்—613403. ஆ: 15-6-1955; 1973. இ: ஆங்கிலம். ஈ : (சி) பல சிறுகதைகள்.

100. ஆறுமுகம், ஐ. (இளவழகு)

அ : வாணிபம்; 135, ஜலான்பால், செரம்பான், மலேசியா. ஆ: 20-11-1941; 1960. இ : ஆங்கிலம், மலாய். ஈ : (க) மனிதன் கதை. (பு) இலட்சியப் பயணம். உ : 'ஐந்தடி' சிறுகதைக்கு தங்கப்பதக்கம்; 'மாயை' நூல் திறனாய்வுப் போட்டியில் தங்கப்பதக்கம்; எழுத்தாளர் சங்க நாவல் போட்டியில் முதற் பரிசு. எ : இந்தியா.

101. ஆறுமுகம், கு.

அ: வரைவாளர், தென்னக இரயில்வே; 69ஏ, பெருமாள் மேலரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி—627002. ஆ: 5-5-1941; 1972. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: (கவி) விநாயகர் துதி; நமசிவாயக் கவசம், தேவி திருப்பள்ளி எழுச்சி, ஆறுமுகர் போற்றி ஆயிரத்தெட்டு. ஊ: இந்து தமிழ்க் கவிஞர் மன்ற திருநெல்வேலி மாவட்டக் கிளையின் செயலாளர்.

102. ஆறுமுகம், ச. (ஊடிவயலார்)

அ : துணைப் பேராசிரியர், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி, தேவகோட்டை விரிவு—623303. ஆ: 25-11-1947; 1966. இ : ஆங்கிலம். ஈ : பல கவிதைகள், மொழி பெயர்ப்புக் கட்டுரைகள்.

103. ஆறுமுகம், தி. சு. (கவிஞர் சிவதாசன்)

அ : ஆசிரியர்; 4, பகத்சிங் தெரு, திருநெல்வேலி—627006. ஆ : 15-6-1921; 1935. இ: ஆங்கிலம். ஈ: (கவி) குறுக்குத்துறை முருகன் திருப்பள்ளியெழுச்சி, குறுக்குத்துறை முருகன் பிள்ளைத் தமிழ், குறுக்குத்துறை முருகன் குறவஞ்சி, திருவுருமாமலைக் கலம்பகம், திருவுரு மாமலைச் சிலேடை வெண்பா, முத்துராம லிங்கம் மும்மணி மாலை, சிவனம்மாள் செய்யுள் திரட்டு. (க) வீரநல்லூர் தலபுராணம். உ: செழுங்கவிச் செம்மல்.

104. ஆறுமுகம், நா. (செவ்வேள்)

அ: தமிழ்ப் பேராசிரியர், ஈரோடுகலைக் கல்லூரி, ஈரோடு-638002 ஆ: 15-6-1934; 1957. இ : ஆங்கிலம். ஈ : (க) மொழி காப்பீர். (வ) திரு. நாராயண குரு.

105. ஆறுமுகம், நா. (மன்மதன்)

அ : தமிழாசிரியர், ஆயிரவைசிய உயர்நிலைப்பள்ளி, சாத்தூர்-626203. ஆ: 7-4-1954; 1969. இ : தெலுங்கு, ஆங்கிலம். ஈ : பல கவிதைகள்.

106. ஆறுமுகம், ப. (கிருஷ்ணதாசன்)

அ : தோட்ட மேலாளர், இரசாக் தோட்டம், பொண்டோக் தஞ்சோங், தைப்பிங், பேரா, மலேசியா. ஆ : 25-12-1918; 1937. இ : ஆங்கிலம், மலாய், தெலுங்கு. ஈ : (கவி) பஜனாமிர்தகீதம், ஹரிஹர முருகானந்தக் கீதாமலர், நவரசானந்தக் கீதம், நவரச ஆனந்த சீர்திருத்தக் கீதமலர், கூட்டுறவுக் கவிதைகள். (வ) சர் ஜகதீஸ் சந்திரபோஸ். (க) பரிமளம். உ : கவிமணி, பண்டிட்.

107. ஆறுமுகம், பூவை எஸ். (பூவை)

அ : இணைப்புத்துறை அதிகாரி, ஏலக்காய் வாரியம்; 1, கன்னையா நாயுடு தெரு, தி. நகர், சென்னை-600017. ஆ: 31-1-1927; 1945. இ : ஆங்கிலம். ஈ : (நா) மகுடி. (ஆ) கல்கி முதல் அகிலன் வரை. (சி) பூவையின் கதைகள் முதலிய 120க்கும் மேற்பட்ட நூல்கள். உ : மகுடி ஓரங்க நாடகத்திற்கு ஆனந்தவிகடனின் முதற்பரிசு ஊ : "ஏலக்காய்" ஏட்டின் துணை ஆசிரியர்.

108. ஆறுமுகம், வெ. (நகைச்சுவைப் பித்தன்)

அ : ஆசிரியர்; 115, ரெசாக் தெரு, பாம் குரோ குடியிருப்பு, கிள்ளான், சிலாங்கூர். ஆ : 11-4-1944; 1958. இ: ஆங்கிலம். மலாய். ஈ : (சி) முப்பது. (கவி) 500க்கும் மேற்பட்டவை. எ : இந்தியா.

109. ஆனந்தன், ஏ. ஆர்.

அ : ஓமியோபதி மருத்துவர்; ஆனைவாரி, (வழி) சேத்தியா தோப்பு-608702. ஆ : 10-2-1950; 1966. இ : இந்தி, ஆங்கிலம். ஈ : (கவி) அபலையின் கடிதம்.

110. ஆனந்தன், கே. எஸ். (யாழ் ஜனுர்த்தனன்)

அ : விவசாயம்; அன்பகம், இணுவில் கிழக்கு, இணுவில், இலங்கை. ஆ : 30-3-1940; 1962. இ: ஆங்கிலம். ஈ : (பு) உறவும் பிரிவும், தீக்குள் விரலை வைத்தால், கற்பக்கிருகம், பனிமலர், இதயமலர், மர்மப்பெண், மனோரஞ்சிதம், கோடுகளும் கோணங்களும், காகித ஓடம், ராதையின் நெஞ்சம், சொர்க்கமும் நரகமும், காவலன் கண்ட கனவு, சாத்தான் வேதம் ஓதுகின்றது. (சி) அறுபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள். உ : வாதவூர் வள்ளல் நாடகத்திற்குத் தங்கப் பரிசு.

111. ஆனந்த் அமலதாஸ், சே. ச.

அ : ஆசிரியர், இலயோலா கல்லூரி, சென்னை—600034 ஆ : 6-6-1944; 1971. இ : இந்தி, பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன். ஈ : இன்னும் விடியவில்லை.

112. ஆனந்தநாதன், க.

அ : விரிவுரையாளர், மெய்யியற்றுறை, பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை, இலங்கை. ஆ : 11-11-1950; 1970. இ : ஆங்கிலம், சிங்களம். ஈ : (க) சிந்தனை, இளங்கதிர், வெற்றிமணி. எ : இந்தியா.

113. ஆனந்ததீர்த்தன், கி. (ஹேமா ஆனந்ததீர்த்தன்)

அ : துணை முதன்மை அலுவலர், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, சென்னை; 21, டி. எஸ். வி. கோயில் தெரு, மைலாப்பூர், சென்னை—600004. ஆ : 21-7-1923; 1939. இ : தமிழ், மலையாளம், மராத்தி, இந்தி, ஆங்கிலம். ஈ : (பு) மிஸ் ரேவதி, பெண்ணா பதுமையா? வைரப்பூ, திரிவேணி, கண்ணாமூச்சி, எத்தனை கோடி இன்பம், பொன்மயில், மன்னிப்பே கிடையாது, ஒரே கட்டில். (மொ) சொப்பன மாளிகை, சென்னசபை நாயக்கன், சிகவீர ராஜேந்திரன், குருதட்சணை, சாக்கடையிலிருந்து, பாழடைந்த கோவில். (சி) 200 சிறுகதைகள்.

114. ஆனந்தராசன், மு. (மகிழரசன்)

அ : எழுத்தர், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை; 1, மூன்றாவது குறுக்குத் தெரு, டாக்டர் இராகவன் காலனி, வடபழனி, சென்னை — 600026. ஆ : 21-2-1940; 1962. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : பல சிறுகதைகள், பாடல்கள்.

115. இந்திரகுமார், க.

அ: மருத்துவ அதிகாரி; 496, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 3-10-1945; 1960. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (க) புது யுகம் கண்டேன், மண்ணில் இருந்து விண்ணிற்கு, Fire walking the Burning Facts. உ: கலாசார அமைச்சின் சாஹித்ய மண்டலப் பரிசு—மண்ணில் இருந்து விண்ணிற்கு எனும் நூலுக்கு. ஊ: திரைப்பட நடிகர். எ: இந்தியா, சோவியத் யூனியன், மாலைத் தீவுகள்

116. இப்ராஹீம். எஸ். (இளம்லீகன்)

அ: புத்தக விற்பனையாளர்; 11/55, வடக்குத் தெரு, புது மடம் அஞ்சல், முகவை மாவட்டம். ஆ: 15-7-1939; 1964. இ: மலாய். ஈ: (க) 200க்கும் அதிகமான கட்டுரைகள். ஊ: மலேசிய நாளிதழ்களான தமிழ்மலர், தமிழ்முரசு

ஆகியவற்றின் கௌரவச் செய்தித் தொகுப்பாளர். எ: மலேசியா, சிங்கப்பூர்.

117. இரத்தினசாமி, தா.

அ: ஆசிரியர்; முருங்கவிளை, இராசாக்க மங்கலம்—629502 ஆ: 19-6-1940; 1968. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (கவி) நவமணி மாலை.

118. இரத்தினம், க. (தாமரைச் செல்வன்)

அ: அச்சுத் தொழில்; 13ஏ, திருச்சி நெடுஞ்சாலை, சிங்கா நல்லூர், கோவை-641005. ஆ: 19-8-1934; 1951. இ: ஆங்கிலம். ஈ: (சி) ஓவிய நாயகி, வாழ்க மணமக்கள். (க) வாழ்க்கை நலச் சிந்தனைகள்.

119. இரத்தினவேலு, பெ. (பாவலர் மணிவேலன்)

அ: ஆசிரியர்; கீழ்பாட்சாப் பேட்டை, அரூர், தருமபுரி மாவட்டம். ஆ: 15-3-1932; 1952. இ: ஆங்கிலம். ஈ: (கு) மழலை இலக்கியம். (கவி) மழலை இன்பம். (வ) காலச் சுவடு. (ஆ) கலித் தொகையில் உவமைகள்.

120. இரபிசிங், ம. செ

அ: துணைப்பேராசிரியர்; 8ஏ, இரண்டாம் அவின்யூ, இந்திரா நகர், சென்னை-600020. ஆ: 22-6-1939; 1955. இ: ஆங்கிலம், வடமொழி, மலையாளம், இந்தி, ஜெர்மன். ஈ: (தி) அகிலனின் பொன்மலர்—ஓர் ஆய்வு, மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பம்—ஓர் ஆய்வு. (வ) தமிழ் இலக்கியவரலாற்றுச் சுருக்கம்.

121. இராசகோபாலன். (சுரதா)

அ: எழுத்தாளர், கவிஞர், பத்திரிகையாசிரியர்; டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சாலை, கலைஞர் கருணாநிதிநகர், சென்னை-600078. ஆ: 23 11-1921; 1940. ஈ: (கவி) சாவின் முத்தம், உதட்டில் உதடு, பட்டத்தரசி, தேன்மழை, சுவரும் சுண்ணாம்பும். (நா) தொடாத வாலிபம். (வ) எப்போதும் இருப்பவர்கள். உ: உவமைக் கவிஞர், கலைமாமணி. ஊ: தமிழ்நாடு அரசு ரூ10,000 தந்து கவுரவித்தது. 'தேன்மழை' தமிழ்நாடு அரசின் பரிசு ரூ 1000 பெற்றது.

122. இராசகோபாலன், நா. (மலையமான்)

அ: நூலகர்; ஏ.டி.2, பட்டினப்பாக்கம், சென்னை-600028. ஆ: 15-7-1932; 1954. இ: ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு. ஈ: (வ) விஞ்ஞான மேதைகள். மற்றும் பல சிறுகதைகள், கட்டுரைகள். கவிதைகள்.

123. இராசமணி, ஆ. (மணியரசு)

அ: துணைப் பேராசிரியர்; ஸ்காட் கிறித்துவக் கல்லூரி. நாகர்கோவில். ஆ: 11-7-1934; 1968. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: நகரம் முதலிய கட்டுரைகளும், எழுஞாயிறு முதலிய கவிதை களும்.

124. இராசமாணிக்கம், ஞா. (அன்பு மணாளன்)

அ: தமிழ்ப்பேராசிரியர், போப் கல்லூரி, சாயர்புரம்-628251. ஆ: 6-2-1936; 1958. இ: ஆங்கிலம். ஈ: (வ) தமிழ் இலக்கிய வரலாறு.

125. இராசமாணிக்கம், வீ. (தாமரைக் கண்ணன்)

அ: தமிழாசிரியர்; காந்திநகர், அச்சிறுபாக்கம் அஞ்சல்—603301, ஆ: 1-7-1934; 1952. இ: ஆங்கிலம். ஈ: (சி)மணக்காற்றாடி, கொன்றைப் பூ, மூன்றாவது துருவம், தங்கத்தாமரை. (நா) வெண்ணிலா முதலிய 7 நாடகங்கள். (வ) திருநாவுக்கரசர், கருணைக்கடல். உ: சிறுகதைச் செம்மல்.

126. இராசமோகன், பா. சி. (தமிழ்ப்பரிதி)

அ: உதவியாளர், தமிழ்நாடு அரசு வேளாண்துறை; 51, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. ஆ: 2-12-1941; 1958. இ: ஆங்கிலம். ஈ: (நா) அமைதி எங்கே? (கவி) ஓ புரட்சி நெஞ்சங்களே, தமிழ்ப்பரிதியின் கவிதைகள், உயிரின் காதல். (சி) ஊனம். (பு) முகிலோவியம்.

127. இராசரத்தினம், வ. அ. (ஈழநாகன்)

அ: அதிபர்; திரிகூடம், மூதூர், இலங்கை. ஆ: 5-6-1925; 1947. இ: ஆங்கிலம். ஈ: (பு) கொழுகொம்பு, ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது, கிரௌஞ்சப் பறவைகள். (மொ) பூவரசம் பூ.

128. இராசாராம், நா. (பசும்பொற்கிழார்)

அ: தமிழாசிரியர்; சித்த வித்தைப் பயிற்சிக்கழகம், பாளையம் பட்டி—626112, ஆ: 12-8-1936; 1960. இ: ஆங்கிலம் ஈ: (கவி)

சித்தநெறிப் பாடல்கள். (க) உவமைக் குறள்—100, சித்த நெறியும் குறள் நெறியும், நித்தியானந்தா பொன்மொழிகள், சொல்விளக்கம்.

129. இராசாராம், பா.

அ: தாவரவியல் பேராசிரியர், பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்—641014. ஆ: 15-6-1931; 1956 இ: தமிழ், ஆங்கிலம், ஜெர்மன். ஈ: (அ) தாவரவியல் (2 பகுதிகள்) மற்றும் நாற்பது கட்டுரைகள்.

130. இராசாராம் பா. (அறவாழி)

அ: தமிழாசிரியர்; 23, தெற்குத் தெரு, வடலூர்—60730; ஆ: 1-1-1930; 1949 இ: ஆங்கிலம். ஈ: (கவி) இன்பக் கொள்ளை.

131. இராசேந்திரம், ஆ. (அனலை—ஆறு)

அ: கமம்; 3ம் வட்டாரம், வடலூர், அனலைத் தீவு. இலங்கை. ஆ: 22-11-1950; 197 . இ : ஆங்கிலம். ஈ : (சி) சேவலும் பேடும்.

132. இராசேந்திரன், க. (ஞானம்பாடி)

அ : எழுத்தர், இந்தியன் வங்கி; 8, நகராண்மைக் கழகக் குடியிருப்பு, ஆர்க்காட்டுச் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024. ஆ : 11-6-1948; 1969. இ : ஆங்கிலம், இந்தி. ஈ : (கவி) திருவடி மலர்கள்

133. இராதாகிருட்டிணன், அ. (ஈரோடு இராதா)

அ: பத்திரிகை விளம்பர ஏஜண்ட்; 416, நேதாஜி வீதி, ஈரோடு. ஆ 3-2-1934; 1960. இ: ஆங்கிலம். ஈ: (கவி) இருவர் இசைப்பாடல்கள். பல சிறுகதைகள், கவிதைகள்.

134. இராதாகிருட்டிணன், எஸ். (ஏர்வாடி)

அ: பாரத ஸ்டேட் பாங்கு, சென்னை—600001. ஆ: 18-5-1947; 1967. இ: ஆங்கிலம். ஈ: (கவி) ஆயிரம் மலர்கள். ஊ. தென்னிந்திய நுகர்வோர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்.

135. இராதாமணாளன், கே. ஜி.

அ: ஆசிரியர், குடும்ப நலச் செய்திக்கதிர்; 79, 53வது தெரு, அசோக்நகர், சென்னை-600083. ஆ: 15-12-1925; 1945. இ: தமிழ்,

ஆங்கிலம். ஈ: (சி) பூக்குடலை, மயானத்தில் முத்தம், புதுவெள்ளம், இன்பக்கனவு, ருஷ்யநாட்டு அழகி, கானல் நீர், துளிதேன். (பு) மறவர் குலத்து மலர்க்கொடி, வீணை, பொற்சிலை, மனப்புயல், கல்லறைக் குயில், பாலைவனம், சிவந்த கன்னம், தேன்மொழி, அன்னம், பாசக்கனல், பெண், நீரோ, சபதம், பசி, எழிலரசி கிளியோபாட்ரா. (நா) அரக்கு மாளிகை, நீலமணி. (க) மதம் அவசியமா? சிந்தனையாளர் இங்கர்சால். (மொ) பிணச்சாம்பல்

136. இராமகிருட்டிணன், கு.

அ: தென்னிந்திய மொழிகள் துறைத் தலைவர், பஞ்சாபு பல்கலைக்கழகம், சண்டிகர்-160014. ஆ: 10-5-1938; 1952. இ: ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, பஞ்சாபி, உருசியன். ஈ: (மொ) சத்திய சாய். (க) பல ஆய்வுக் கட்டுரைகள்.

137. இராமகோடி, கு.வே.

அ: தமிழ்த் துணைப் பேராசிரியர்; இராசன் காம்பவுண்டு, விளாச்சேரி தெரு, திருநகர், மதுரை-625006. ஆ: 3-10-1932; 1954. இ: ஆங்கிலம், இந்தி, தமிழ். ஈ: பல கட்டுரைகளும், கவிதைகளும்.

138. இராமச்சந்திரன், ஆ. ம. (ஏ. எம்.ஆர்.)

அ: எழுத்தாளர்; 6, ஜிந்தாசாகிப் தெரு, சென்னை-600001. ஆ: 28-5-1933; 1956. ஆ: ஆங்கிலம். ஈ: (சி) ஏ. எம். ஆர். கதைகள். ஊ: இந்திய இலக்கியக் கலாச்சாரக் கழகத்தின் நிறுவனர்.

139. இராமச்சந்திரன், ச.

அ: ஓவியர்; வாழப்பாடி அஞ்சல்- 636115. ஆ: 15-3-1929; 1947. இ: ஆங்கிலம். ஈ: (கு) பிள்ளைக் கவியமுது. (க) இருபது அம்சதிட்டம். ஊ: தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற சேலம் மாவட்டத் தலைவர்.

140. இராமச்சந்திரன், து. (இளமைப் பித்தன்)

அ: காசாளர், பாண்டியன் போக்குவரத்துக் கழகம்; 391, கீழ நான்காவது வீதி, புதுக்கோட்டை. ஆ: 1922; 1942. இ: ஆங்கிலம். ஈ: (பு) கடைசி முத்தம், சுமங்கலி, குலவிளக்கு. (சி) நினைவுச் சின்னம், காதற் பரிசு, நெஞ்சில் வசந்தம்,

141. இராமச்சந்திரன், வீர. (அரசு)

அ : முதுநிலை எழுத்தர்; 5167, மாரியம்மன் கோயில் தெரு, முருங்கப்பாக்கம் அஞ்சல், பாண்டிச்சேரி-4. ஆ : 5-4-1939; 1951. இ : ஆங்கிலம். ஈ : (சி) அன்புத் திருமணம் மற்றும் பல கட்டுரைகள்.

142. இராமசாமி. (தணிகைக்கவி)

அ : விவசாயம்; டாக்டர் இராதாகிருட்டிணன் நூலகம், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. ஆ : 1-1-1947; 1970; இ : ஆங்கிலம். ஈ : (கவி) முருகன் பக்திப் பாடல்கள், முருகன் பாமாலை, முருகன் புகழ்மாலை, முருகன் இசைமாலை, கோட்டத்துக் குமரனும் குன்றாடும் முருகனும்.

143. இராமசாமி, கு. ச.

அ : புருப் ரீடர், தமிழ்நேசன்; 14, ஜலான் 37, செலயாங் பாரு, கோலாலம்பூர். ஆ: 5-10-1947; 1968. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகளும், கட்டுரைகளும்.

144. இராமசாமி,ப. சு. (பாரதிநேசன்)

அ : 4, பாரதி தெரு, எட்டையபுரம், தமிழ்நாடு. ஆ : 1-6-1925; 1959. இ : ஆங்கிலம். ஈ : (க) இளைய பாரதம், நாடும் நடப்பும். ஊ : இந்திய சுதந்திரத்திற்கு உழைத்தவர். எ : இலங்கை.

145. இராமசாமி, பி. (நாத்திகன்)

அ : பத்திரிகை ஆசிரியர்; 112ஏ, ஆற்காடு ரோடு, சென்னை-600024. ஆ : 25-12-1932; 1955. இ : ஆங்கிலம். ஈ : பல கட்டுரைகளும், சிறுகதைகளும். ஊ : நாத்திகம் எனும் தமிழ் நாளிதழினை நடத்தியவர்.

146. இராமசாமி, பொ. இரா.

அ : சோலைசேரி, (வழி) இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம். ஆ : 21-3-1951; 1967. இ : தமிழ், ஆங்கிலம். ஈ : (கவி) நெஞ்சம் மறப்பதில்லை ஊ : இந்திய மருத்துவப் படிப்பு பயின்றவர்.

147. இராமசாமி, ம.

அ : மிட்லெண்ட் தோட்டம், கிள்ளான், சிலாங்கூர், மலேசியா. ஆ : 14-10-1946; 1971. இ : ஆங்கிலம்,

மலாய். ஈ : (பு) யார் குற்றம். (சி) இதயதாபம். ஊ : நாடக நடிகர், வானொலி பாடகர், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர். எ: இந்தியா, சிங்கப்பூர்.

148. இராமசாமி, ரெ. (தாசரதி)

அ : 12, பிக்கான் சீனா, அலோர் ஸ்டோர், கெடா, மலேசியா. ஆ : 10-8-1920; 1938. இ : மலாய், ஆங்கிலம். ஈ : (க) பாரதியின் காதலி, திருவிளக்கு வழிபாடு. (கவி) சிவச்செல்வர் பாமாலை, இலக்கிய நாயகி சீதை. எ : தாய்லாந்து, பர்மா, தென் வியட்நாம், சிங்கப்பூர்.

149. இராமசாமி, வெ. (மருதன்)

அ : மேல்நிலை எழுத்தர்; வருமானவரி அலுவலகம்: விருதுநகர்-626002. ஆ : 15-11-1942; 1969. இ : ஆங்கிலம். ஈ : 30 கவிதைகள்.

150. இராமசாமி, வெ. ச. (விறி)

அ : விலங்கியல் பேராசிரியர், பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி, சிவில் விமான நிலையம் அஞ்சல், கோவை-641014. ஆ: 10-2-1933; 1956. இ: ஆங்கிலம். ஈ: (அ) உயிரியல், நாமும் நமது உணர்ச்சி உறுப்புக்களும், உயிரோட்டம், உயிரினங்களின் இயல்பு, Text-Book of Zoology for PUC. உ : உயிரியல் துணைப் பாடநூலுக்கு ரூ. 1000 பரிசு.

151. இராமசாமி, ஆர். (சம்பு)

அ : ஆசிரியர்; பி78, பாரதிநகர், பூளைமேடு அஞ்சல், கோவை-641004. ஆ: 25-2-1935; 1960. இ: ஆங்கிலம். ஈ: (க) 400 கட்டுரைகள். (மொ) காற்றுப் பெருங்கடல், பெயின்மன் விரிவுரைகள்.

152. இராமசாமி, எஸ். கே. (இலக்கிய தீபன்)

அ : ஆசிரியர்; 74பி, சீரணம்பாளையம், பாலக்கரை—638057. ஆ : 9-6-1944; 1965. இ: ஆங்கிலம். ஈ : (பு) ஓர் ஆரம்பத்தின் முடிவு.

153. இரர்மசர்மி, வி. எம். (அறிவழகன்)

அ : நகை விற்பனையாளர்; 83, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-12, இலங்கை. ஆ: 24-5-1954; 1967. இ: ஆங்கிலம், சிங்

களம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், ஊ : மலை விளக்கு என்னும் பத்திரிகையின் ஆசிரியர்.

154. இராமசுப்பிரமணியன், மு. (இளசை மணியன்)

அ: எழுத்தாளர்; கார்த்திகை வீதி, எட்டயபுரம். ஆ: 16-6-1942; 1967. இ: ஆங்கிலம். ஈ: (க) பாரதி தரிசனம். (வ) எட்டயபுரம் வரலாறு. (மொ) 20வது நூற்றாண்டு முதலாளித் துவம். ஊ: எட்டயபுரம் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர்.

155. இராமசுவாமி, மே. சு.

அ: ஓய்வுபெற்ற துணைநீதிபதி; 22/866, தைக்காடு, திருவனந்தபுரம்—695014. ஆ: 6-8-1916; 1933. இ: இந்தி, மலையாளம், ஆங்கிலம். ஈ: (க) இந்திய ஓவியம்.

156. இராமநாதக் கவிராயர், மீ. (மீரா)

அ: 32, தெற்குக் கிருஷ்ணன் கோயில் 3வது சந்து மதுரை—625001. ஆ: 2-6-1908;1924. ஈ: (கவி) அங்கயற்கண்ணி, இசைமணிமாலை. உ: இயலிசைப் புலவர்.

157. இராமநாதபிள்ளை, த.

அ: தும்பளை, பருத்தித்துறை, இலங்கை. ஆ: 20-4-1903; 193? இ: ஆங்கிலம், இலத்தீன். ஈ: (வ) உலக வரலாறு. (மொ) யவனமஞ்சரி. (தி) இலக்கிய இலக்கண ஆய்வுரைகள், சைவ சமய ஆய்வுரைகள். எ: இந்தியா

158. இராமநாதன், ஆறு.

அ: மஞ்சக்கொல்லை அஞ்சல் 608601. ஆ: 3-8-1950; 1965. இ: ஆங்கிலம். ஈ: (சி) குமுறல்.

159. இராமநாதன், ஐ. கோ. (தேவிதாசன்)

அ: பத்திரங்கள் எழுதுபவர்; சுண்டப்பாளையம் அஞ்சல், கோவை-641007. ஆ: 25-7-1920;1965. இ: ஆங்கிலம், மலையாளம், வடமொழி. ஈ: (கவி) தமிழினிமை, ஆராவமுதர் பாமாலை. (மொ) பஜகோவிந்தம், பொன்மழை பொழி துதி. உ: பாவலர்.

160. இராமநாதன், பாப்பு. (சாரதா மணாளன்)

அ: தமிழாசிரியர்; பட்டத்தையர் சந்து, பேரையூர், மதுரை மாவட்டம். ஆ: 6-8-1922; 1944. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள்.

161. மு. இராமநாதன். (வாய்மைதாசன்)

அ : தமிழாசிரியர்; வாய்மை மேடு—614714. ஆ : 30-6-1937; 1958. இ : ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகளும், கவிதைகளும்.

162. இராமநாயுடு, பே.

அ : மாவட்ட அமைப்பாளர், முதியோர் கல்வி இலாகா; பெடரல் அரசாங்க நிலத்திட்டம், பாலோங் 2, பஹாவ், நெகிரி செம்பிலான். ஆ : 15-8-1942; 1962. இ : தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், மலாய். ஈ: (சி) 20 சிறுகதைகள். எ : தாய்லாந்து, இந்தோனேசியா.

163. இராமமூர்த்தி, இரா. க. (ஜீவபாரதி)

அ : எழுத்தர்; 12, நியூ செஞ்சுரி காலனி, அய்யனப்பாக்கம் சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை அஞ்சல், சென்னை-600058. ஆ : 15–6-1950; 1971. இ : ஆங்கிலம். ஈ : (கவி) ஒரு முடிவுக்கு வாருங்கள். ஊ : கலை இலக்கியப் பெருமன்றத்தின் செங்கை மாவட்டத் தலைவர் பொறுப்பு.

164. இராமமூர்த்தி, வை. (வீயாரெம்)

அ : தமிழாசிரியர்; 9, இராமராயர் அக்ரகாரம், தென்னூர், திருச்சிராப்பள்ளி—620017. ஆ : 2-5-1937; 1958. இ : ஆங்கிலம். ஈ : (க) கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்.

165. இராமலிங்கம், ந.

அ : துணைத் தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை—625014. ஆ : 15-6-1937; 1964. இ: ஆங்கிலம், இந்தி. ஈ : பல ஆய்வுக் கட்டுரைகள்-தமிழிலும் ஆங்கிலத்திலும். (வி) அற்புதத் திருவந்தாதி—குறிப்புரை.

166. இராமலிங்கம், ப. (ஜீன்)

அ : துணை அறிவியல் அறிஞர்; சி-103, ஆலியாறு சாலை, வட்டம்-3, நெய்வேலி-607801. ஆ : 16-3-1926; 1952. இ : ஆங்கிலம், பிரெஞ்சு. ஈ : (க) ஐயோ தீ, பாம்பு கடித்தால், நீரில் மூழ்கினால்.

167. இராமலிங்கம், பா. (அருணை ராதா ராமு)

அ : ஓவியர்; 72, கம்மாளர் தெரு, திருவண்ணாமலை. ஆ : 8-3-1945; 1961. இ : ஆங்கிலம். ஈ : (சி) பதினைந்து சிறு கதைகள்.

168. இராமலிங்கம், மா. (எழில் முதல்வன்)

அ : தமிழ்ப் பேராசிரியர்; 4, பவானி நகர், தஞ்சாவூர்-4. ஆ: 3-10-1940; 1960. இ : ஆங்கிலம். ஈ : (சி) பொய்யான இரவுகள், அதற்கு விலையில்லை. (கவி) இனிக்கும் நினைவுகள். (ஆ) நாவல் இலக்கியம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், புனைகதை வளம், அகிலனின் கலையும் கருத்தும், இலக்கியமும் சமுதாயமும், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், காவியமும் நாவலும்.

169. இராமலிங்கம், சி. எஸ். (சீயெஸ்ஸார்)

அ : தலைமை ஆசிரியர்; 8, கள்ளச் செட்டித் தெரு, கடலூர் பழைய நகர், தென்னார்க்காடு மாவட்டம். ஆ : 10-10-1936. 1966. இ : ஆங்கிலம். ஈ : (சி) பணயம், அந்தரங்கம், மேனகா, தடம் மாறிப் போனவர்கள், தத்துவக் கதைகள்.

170. இராமராவ், யு.

அ : மருத்துவர்; 112, தம்புச் செட்டித் தெரு, சென்னை-600001. ஆ : 18-10-1939; 1974. இ : தமிழ், ஆங்கிலம், இந்தி. ஈ: (அ) குழந்தை வளர்ப்பும் நோய்த் தடுப்பும், முதல் உதவி. எ : இலங்கை.

171. இராமன், சுப. (கலை அன்பன்)

அ : பத்திரிகையாளர்; மு. மு. கு. சுப. இல்லம், இராமச்சந்திர புரம்-622505. ஆ : 28-2-1923; 1960. இ : ஆங்கிலம், கன்னடம். ஈ : (க) செல்வம் கொழிக்கும் சீமை, திரைப்படம் உருவாகிறது, ஐரோப்பாவில் ஐந்து நாடுகள். (சி) அழகின் அடிமை. (பு) மனமென்னும் மாளிகை. (மொ) சிதைந்த கனவு, கம்யூனிஸ்ட் சீனாவில் சீனக் குடும்பம். எ : பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து.

172. இராமன், ப. (பங்கஜராமன்)

அ : தமிழ்த் துணைப்பேராசிரியர்; 2ஏ, சிதம்பரசாமி 2வது தெரு, மயிலாப்பூர், சென்னை-600004. ஆ: 15-7-1930; 1954. இ : ஆங்கிலம், இந்தி, வடமொழி. ஈ : (வ) தமிழ் இலக்கிய வரலாறு. எ : இலங்கை.

173. இராமனாதன், லெ. (லெ. ரா)

அ : தமிழ்ப் பேராசிரியர், அரசர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி, சிவகங்கை, இராமனாதபுரம் மாவட்டம். ஆ : 5-2-1937;

1962. இ: ஆங்கிலம். ஈ: (கவி) சற்குரு மணிமாலை. (க) மானாமதுரை, அறந்தரு சிந்தையோன், இசைமறையோன். உ: செந்தமிழ்ச்சுடர். எ : இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்.

174. இராமர்நந்தம், நா. (எழில்—மகிழ்நன்)

அ : ஆசிரியர்; முதனை அ.நி, (வழி) ஊமங்கலம்-607804. ஆ: 5-1-1947; 1970. இ : ஆங்கிலம். ஈ : முப்பது கட்டுரைகள்.

175. இரர்மாநுஜம், இரா. (இளையநம்பி)

அ: கல்வி நெறியாளர்; 192-193. மாதாகோவில் தெரு, கே. புதூர், மதுரை-625007. ஆ: 22-7-1936; 1958. இ: ஆங்கிலம். ஈ: (ஆ) பாழிப்புதையல். (மொ) வடுவாளன். (பு) மை பொதி விளக்கு.

176. இராமானுஜம்பிள்ளை, அர. (கதிரவன்)

அ: துணைத்தமிழ்ப் பேராசிரியர்; 5, தெற்குக் கல்லறைத் தெரு, கடலூர்த் துறைமுகம்-607003. ஆ: 12-5-1933; 1946. இ: ஆங்கிலம், இந்தி, தெலுங்கு. ஈ: (க) மக்கட்பேறு, இளமை வகுத்த வழி. (நா) தொண்டைமான் இளந்திரையன், கலிங்கத்துக் கைதி, வானுலகில் வள்ளுவர். எ: இலங்கை.

177. இராமையன், கு.பெரு. (வடசேரி குபேரா)

அ: ஆசிரியர்; வடசேரி அஞ்சல், ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். ஆ 3-12-1937; 1956. இ: ஆங்கிலம். ஈ: (சி) வழிகாட்டி, தேன்கூடு. (நா) கொம்புத்தேன்.

178. இராமையா, மா. (மலைநாடன்)

அ: எழுத்தர்; 666, ஜாலான் ரெஸ்ட் அவுஸ், தங்காக், ஜோகூர், மலேசியா. ஆ: 30-7-1930; 1946. இ ஆங்கிலம், மலாய். ஈ: (பு) எதிர்வீடு, மூங்கிற்பாலம், நீர்ச்சுழல், சங்கமம். (சி) இரத்ததானம், பரிவும் பாசமும். (வ) மலேசிய தமிழ் இலக்கிய வரலாறு. (தொ) மலேசிய தமிழ்ச் சிறுகதைகள். எ: இந்தியா, சிங்கப்பூர்.

179. இராஜகோபால், ஆ. (செம்பியன் செல்வன்)

அ: ஆசிரியர்; 10, புதிய வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 1-1-1943; 19·0 இ: ஆங்கிலம். ஈ: (சி) அமைதியின் இறகுகள். (நா) மூன்றுமுழு நிலவுகள், விடிய இன்னும் நேரமிருக்கு. (தொ) விண்ணும் மண்ணும். (ஆ) ஈழத்துச் சிறுகதை மணிகள். உ:

ஈழநாடு பத்தாண்டு நிறைவுப் போட்டியில் 'விடிய இன்னும் நேர மிருக்கு' நாடகத்திற்கு முதற் பரிசு.

180. இராஜசிங்கம், சிவசாமி. (சுதாராஜ்)

அ: தொழில்நுட்ப வல்லுநர்; 28, 4ஆம் ஒழுங்கை. அரசடி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 10-7-1950; 1972. இ: ஆங்கிலம். சிங்களம். எ: (சி) பலாத்காரம்.

181. இராஜம்மாள், த. (கமலப்பிரியா)

அ: 930, கம்போங் கோவில், ஜாலான் பெர்ராம், கப்பளாபத் தாஸ், பி. வெ. மலேசியா. ஆ: 9-7-1952; 1965. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல கட்டுரைகளும் சிறுகதைகளும்.

182. இராஜன், பி.டி. (தாமரைக் கண்ணன்)

விவேகானந்தர், நானக், இராமலிங்க வள்ளலார், ஏழைபங்காளன் லெனின். (மொ) அரபுக் கதைகள்-எட்டு பாகங்கள், ஈசாப் நீதிக்கதைகள், பஞ்ச தந்திரம், வியாசபாரதம், வால்மீகி ராமாயணம். (க) மாணவருக்கு, பெண்களுக்கு, நமது மொழிப் பிரச்சினை. உ: சோவியத்நாடு நேரு பரிசு பெற்றவர். எ: சோவியத் ருஷ்யா, மலேசியா, பர்மா.

795. நடராஜன், சி.

அ: எழுத்தாளர்; 34, மகாலட்சுமி தெரு, தி.நகர், சென்னை—600017. ஆ: 6-4-1940; 1971. ஏ: (சி) வேடிக்கை கதைகள், விளையாட்டுக் கதைகள், அதிசயக் கதைகள். (வ) பெண் கல்வி பேணிய பெரியார். (க) கைரேகை கற்போம் வாரீர்.

796. நடராஜன், சு.

அ: 89, புதுக்கிராமம், தூத்துக்குடி—628003. ஆ: 20-6-1911; 1973. இ: ஆங்கிலம், ஜெர்மன், இந்தி, வடமொழி. ஈ: (க) தமிழ் வல்லின எழுத்துக்கள், தமிழும் சமஸ்கிருதமும். எ: இத்தாலி, ஜெர்மனி, பிரான்சு, ஹாலந்து, இங்கிலாந்து, ஆப்கானிஸ்தானம், ஈராக், குவைத், சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இலங்கை.

797. நடராஜன், ரா.

அ: மெக்கானிக்; ஈ/47ஏ, எஸ்.பி.பி. காலனி, ஈரோடு—638010. ஆ: 7-3-1943; 1975. ஈ: (க) அறியாமை நீக்கம், அறிவு விளக்கம்.

798. நடராஜன், டி. (தேவ. நடராஜன்)

அ: தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு அதிகாரி; 21, வெங்கடாசல செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—600005. ஆ: 6-12-1932; 1942. இ: ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன். ஈ: (க) சோழர் காலத்து நில அளவைகள், பண்டைத் தமிழ் நாட்டில் அறநிலையங்கள். பல கட்டுரைகள், கவிதைகள். எ: பர்மா.

799. நடராஜன், கே. (மிளிதேன் நடராஜன்)

அ: விவசாயம்; மிளிதேன் அஞ்சல், கோத்தகிரி—643217. ஆ: 4-2-1950; 1973. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள். ஊ: கோத்தகிரி எழுத்தாளர் சங்கத் தலைவர்.

800. நடராஜன், கே.

அ: எல். என். 4, லாயிட்ஸ் குடியிருப்பு, சென்னை-600014. ஆ: 2-1-1934; 1953. இ: ஆங்கிலம், ஈ: பல கட்டுரைகள்,

801. நடராஜன், என். வி. (கூத்தபிரான்)

அ: தமிழ் அறிவிப்பாளர்-குழந்தைகள் நிகழ்ச்சி தொகுப்பாளர், அகில இந்திய வானொலி நிலையம், சென்னை; 4, அருணசலபுரம், அடையாறு, சென்னை—600020. ஆ: 10-12-1932; 1951. இ: ஆங்கிலம். ஈ: (நா) சின்னக்குருவி. உ: குழந்தை எழுத்தாளர் சங்க நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர். எ: சிங்கப்பூர், மலேசியா.

802. நடராஜன். எஸ். (நஜன்)

அ: பத்திரிகையாளர்; 39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை—600004. ஆ: 6-8-1918; 1939. இ: ஆங்கிலம். ஈ: (க) சுதந்திரச் சிந்தனைகள், எது செல்வம், உங்களுக்குச் சட்டம் தெரியுமா? அழகுக் கலை, அறிவுவளர 100 விஷயங்கள், பாரதப் பிரதமர்கள். (வ) மகாத்மா போற்றிய மகாத்மா, மகாகனம் சாஸ்திரியார், தீனபந்து ஆண்ட்ருஸ், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., சத்தியமூர்த்தி, கலைவாணர் கதை, சுதந்திர வீரர்கள், தமிழக மேதைகள், சுதந்திரப் போரில் தமிழர் பங்கு. (அ) செயற்கைச் சந்திரன். உ: தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசு ரூ 1000—பெற்றவர்.

803. நடவரசன், வி. சி.

அ: ஆயுர்வேத மருத்துவர்; 1, கஸ்தூரிபாய் தெரு, காட்பாடி—632007. ஆ: 20-8-1944; 1963. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (க) சிவனும் சந்திரமண்டலமும், ஏனில்லைத் தமிழில், திருவருள் முறையீடு. உ: செந்தமிழ் அருவி:

804. நடாதூர் வேங்கடாச்சாரி அமலாச்சாரியார். (புதுவை அமலன்)

அ: தட்டெழுத்தர்; 2, சின்னையாபுரம் பங்களா, பாண்டிச்சேரி—605003. ஆ: 3-6-1945; 1964. இ: ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ: (சி) தமிழகச் சிறுகதைகள். (கு) மாயப் பிசாசு, அம்மா உன்னை மறவேன். (கவி) உதய கீதங்கள்.

805. நடேச நாராயணன். (கழுகுமலையான்)

அ: தமிழாசிரியர்; மானாம்பதி—603403. ஆ: 3-4-1935; 1953. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள். உ: நல்லிசைக் கவிஞர்.

806. நடேசன், க. (கபிலர்)

அ: பத்திரிகை ஆசிரியர்; 'செந்தில்', நவாலி தெற்கு, மானிப்பாய், இலங்கை. ஆ: 30-12-1935; 1958. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

807. நம்பி, சு.

அ: செய்துங்கநல்லூர் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம். ஆ: 7-2-1933; 1952. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், திருத்தலப் பதிகங்கள்.

808. நம்மாழ்வார், பி. எல். (இளமாறன்)

அ: 6, நைனியப்பன் தெரு, பட்டாளம், சென்னை—600012. ஆ: 5-5-1939; 1959. ஈ: பல கவிதைகள்.

809. நமசிவாயம், தி. ரா.

அ: பொறியியல் பயிற்றுவிப்பாளர், எந்திரவியல்துறை, பி. எஸ். ஜி பாலிடெக்னிக், கோவை-641004. ஆ: 27-7-1939; 1959. இ: ஆங்கிலம். ஈ: (க) கடைசல் எந்திர வேலை முறைகள்.

810. நமசிவாயம் சிவபாதம். (புத்தொளி)

அ: ஆசிரியர்; தமயந்திப் பதிப்பகம், அச்சுவேலி, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 5-12-1932; 1950. இ: ஆங்கிலம். ஈ: (க) படித்துப் பார், புத்தொளி மலர்ச்சி, மொழியும் நாடும், கட்டுரைக் கதம்பம், கட்டுரை மணிகள், நாளை நமதே, மலர்க தமிழ் ஈழம், தமிழ்த் தாயின் கண்ணீர். (அ) அப்பாலோ 11 & 12. (வ) தமிழர் தலைமகன் ஜீ. ஜீ., தமிழர் செல்வம் செல்வா, ஆசிரியர்க்காசான், பகத்சிங். எ: இந்தியா.

811. நயினார் முகமது, சி.

அ: தமிழ்ப் பேராசிரியர், ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி. ஆ: 9-11-1928; 1950. இ: ஆங்கிலம், அரபு. ஈ: (க) மக்கள் மன்றம். (வி) நாயகம் பிள்ளைத்தமிழ். ஊ: தமிழகப் புலவர் குழுவின் துணைச் செயலர்; ஆத்தூர் தமிழ்ச்சங்க நிறுவனர். எ: இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்.

812. நரேந்திரன், கி. (கருமலைத் தமிழாழன்)

அ: எழுத்தாளர்; நகர அச்சகம், 24, முகமதலி கிளப்ரோடு, தருமபுரி—636701. ஆ: 16-7-1951; 1967. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (கவி) நெஞ்சின் நிழல்கள், காவியத் தலைவன். (கா) மலர்விழி,

813. நல்லபெருமாள், ர.சு. (சந்திரசூடன்)

அ: வழக்கறிஞர்; 21, போலீஸ் ஸ்டேஷன் ரோடு, பாளையங் கோட்டை—627002. ஆ: 15-12-1931; 1950. இ: ஆங்கிலம். ஈ: (பு) கல்லுக்குள் ஈரம், போராட்டங்கள், திருடர்கள், கேட்டதெல்லாம் போதும், எண்ணங்கள் மாறலாம், நம்பிக்கைகள். (சி) சங்கரா பரணம், இதயம் ஆயிரம்விதம். (வ) சிந்தனை வகுத்த வழி, பாரதம் வளர்ந்த கதை. (கு) பிரும்ம இரகசியம். உ: கல்கி வெள்ளி விழா போட்டியில் ரூ 7500/—பரிசு பெற்றவர்; தமிழக அரசின் பரிசும் பெற்றவர். எ: இலங்கை.

814. நவஜோதி, க. (தமிழ்த் தும்பி)

அ: உதவிச் சுவடிக் காப்பாளர்; 29, சீறீ சிவானந்த வீதி, கொட்டஞ்சேனை, கொழும்பு—13, இலங்கை. ஆ: 2-4-1941; 1957. இ: ஆங்கிலம், சிங்களம், மலையாளம், போர்த்துகீசியம். ஈ: (ஆ) பல்லவர் காலமும் பக்திக் கோலமும், நாட்டுப் பாடலில் மலை நாட்டு வரலாறு. (பு) ஓடிப்போனவன். (க) இலக்கிய மகளிர் இதய வேட்கை. எ: இந்தியா.

815. நவநீதகிருஷ்ணன், ப. வே. (நவநீ)

அ: பொறியியற் கணித விரிவுரையாளர், அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம்-636011. ஆ: 5-7-1947; 1960. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (சி) நினைவுகளுக்கு நிறம் உண்டு.

816. நன்னன், மா.

அ: தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை—600005. ஆ: 15-5-1925; 1943. இ: ஆங்கிலம். ஈ (க) மாதுளை, தேனிறால், அறத்தின் வித்து, தென்னாட்டு வாசகம்.

817. நாகசாமி, இரா. (ஓலைநாயகம்)

அ: தொல்லியல் இயக்குநர்; இ38ஏ, 22வது குறுக்குத் தெரு, பெசண்ட் நகர், சென்னை—600090. ஆ: 10-8-193 ; 1955. இ: ஆங்கிலம், இந்தி, வடமொழி, ஜெர்மன். ஈ: (க) கலைச் செல்வங்கள், மாமல்லை, யாவரும் கேளிர், Art of Tamil Nadu, Kailasanatha, Gangaikondacholapuram. எ: இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு, கிரேக்கம், மலேசியா, சிங்கப்பூர்.

818. நாகப்ப செட்டியார், ரெ. (அறவழி)

அ: பத்திரிகையாளர்; சண்முகநாதபட்டணம் அஞ்சல்—623405. ஆ. 22-6-1927; 1954. இ: ஆங்கிலம், இந்தி, மலாய். ஈ; பூல சட்டுரைகள், ஏ; மலேசியா, சிங்கப்பூர்.

819. நாகப்பன், ஆ.

அ: ஆசிரியர்; 500-பி, அரசினர் குடியிருப்பு, நிலாய், நெகிரி செம்பிலான், மலேசியா. ஆ: 30-3-1944; 1957. இ: ஆங்கிலம், மலாய். ஈ: (சி) கோணல் ஆறு. எ: சரவாக், கிழக்கு மலேசியா.

820. நாகரத்தினம், கே.

அ: 1/81, வடக்கு வீதி, தருமபுரம், மாயூரம்—609001. ஆ: 10-6-1947; 1971. இ: ஆங்கிலம். ஈ: 75 சிறுகதைகள்; 172 கவிதைகள்.

821. நாகராஜன், அ.

அ: அன்புத்தாய் பதிப்பகம், கடற்கரைச் சாலை, நாகர்கோவில்—629002. ஆ: 2-9-1950; 1971. இ: ஆங்கிலம். ஈ: (க) உன்னையே நீ அறிவாய்.

822. நாகராஜன், என். (வசுமதி)

அ: தொழிற்சாலை மேலாளர்; 78 (1264), நாகப்பா பிளாக், ஸ்ரீராமபுரம், பெங்களூர்—560021. ஆ: 15-4-1922; 1937. இ: ஆங்கிலம், கன்னடம். ஈ: பல சிறுகதைகள். எ: ஆப்கானிஸ்தானம், சிங்கப்பூர்.

823. நாகலிங்கம், இரா. (அன்புமணி)

அ: ஆரையம்பதி, காத்தாங்குடி, இலங்கை. ஆ: 6-3-1953. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள். எ: இந்தியா.

824. நாகலிங்கம், கோ. (நாகமணி)

அ: தமிழாசிரியர்; ஆர்ப்பாக்கம்—606752. ஆ: 24-6-1934; 1953. இ: ஆங்கிலம், இந்தி, தமிழ். ஈ: பல கவிதைகள்.

825. நாகலிங்கம், சி. (தொல்புரக்கிழார்)

அ: தமிழ் விரிவுரையாளர்; தமிழ்நிலை, தொல்புரம், சுழிபுரம் அ. நி., இலங்கை. ஆ: 30-5-1920; 1941. ஈ: (க) மொழியுணர்ச்சி, காந்தியநோக்கு, கண்ணகி கற்பு, சர்வோதயம்,, பாரதச் சுடர், சத்திய சரிதை. (நா) மறக்குடி மாண்பு. (கவி) காந்தியக் கிராமம். உ: இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். எ: இந்தியா.

826. நாகலிங்கம், ரா. மு. (கவிதா)

அ: பத்திரிகையாளர்; 98, திருகோணமலை வீதி, கண்டி, இலங்கை. ஆ: 20-4-1923; 1949. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (வ) இராஜலிங்கம் வாழ்க்கை வரலாறு. எ: இந்தியா, சிங்கப்பூர், மலேசியா.

827. நாச்சிமுத்து, கி.

அ: தமிழ் விரிவுரையாளர், கேரளப் பல்கலைக்கழகம், காரிய வட்டம், திருவனந்தபுரம். ஆ: 24-8-1947. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: (ஆ) சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள். எ: மேற்கு ஜெர்மனி.

828. நாச்சியப்பன், நாரா. (அண்ணாவி)

அ: அச்சக உரிமையாளர்; 137, ஜனி ஜான் கான் தெரு, சென்னை—600014. ஆ: 13-7-1927; 1945. இ: ஆங்கிலம். ஈ: (பு) மோகனக் கிளி, மதுரைச் சீமையில் புதுவைக் கள்ளன், நான்கு பக்கீர்கள் கதை. (கு) குமரித் தீவு, மூன்றாவது இளவரசன், தங்கத் தேனீ, அசோகர் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் முதலிய பல நூல்கள். (கவி) கொய்யாக் காதல், சிறுவர் பாட்டு, நாச்சியப்பன் பாடல்கள் முதலியன. எ: பர்மா.

829. நாச்சியப்பன், சி.என்.

அ: பதிப்பாளர்; 137, கண்டனூர் ரோடு, காரைக்குடி-1. ஆ. 3-3-1933; 1961. இ: ஆங்கிலம். ஈ: (பு) சாணக்கியனை வென்றவள், குடும்பமே கோவில், நெஞ்சுக்கு நீதி, நீதிக்கு ஒரு பெண், அழைக்கிறது அன்னை பூமி, கூவாத குயில், நீதான் பெண். (நா) பெண்ணே ஒரு கவிதை. (கு) பக்தியை வளர்த்த பாவலர்கள், திரும்பி வா பாபு, விவேகாநந்தரின் வீர வரலாறு.

830. நாதன், என்.எஸ். (தயாளன்)

அ: எழுத்தர்; ஆலன்கோட்டை, கணபதிபுரம் அ.நி—624502. ஆ: 2-3-1936; 1965. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: பல சிறு கதைகள்.

831. நாமதேவன், அ. (அரிமதி தென்னகன்)

அ: தமிழாசிரியர்; 22ஏ, சண்முகவேலாயுத முதலியார் வீதி, பாண்டிச்சேரி—605001. ஆ: 12-3-1934; 1953. இ: ஆங்கிலம். ஈ: (கவி) ஆனந்தரங்கன் பிள்ளைத் தமிழ், கலைஞர் மும்மணிக்

கோவை, ஐந்திணை வெண்பா ஐம்பது, முகில்விடு தூது, அழகோவியம், கள்ளிப்பூ, மறத்தி.

832. நாயகம், ஆ.பெ. (விதி)

அ: வியாபாரம்; 85, தெய்வநாயகம் பிள்ளைத் தெரு, செவ்வாய்ப் பேட்டை, சேலம்—636002. ஆ: 21-12-1952; 1963. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், நாடகங்கள்.

833. நாரண துரைக்கண்ணன். (ஜீவா)

அ: எழுத்தாளர்; 25, கங்கையம்மன் கோயில் தெரு, சூளைமேடு, கோடம்பாக்கம், சென்னை—600094. ஆ: 24-8-1906; 1925. இ: ஆங்கிலம், இந்தி, தெலுங்கு. ஈ: (பு) உயிரோவியம், வேலைக்காரி, வேடதாரி, புதுமைப் பெண், நடுத்தெரு நாராயணன், சீமான் சுயநலம், கோகிலா, தியாகத் தழும்பு, தும்பைப்பூ, தரங்கிணி, யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்? இவ்வுலகைத் திரும்பிப் பாரேன். (நா) தீண்டாதார் யார்? சீவகநம்பி, சதுரங்கம், பந்தபாசம், குமரி முதல் காஷ்மீர் வரை, திருவருட்பிரகாச வள்ளலார், தெய்வப்புலவர் திருவள்ளுவர். (சி) அழகாம்பிகை, பார்வதி, சபலம் தேவகி, மேனகா, ஹம்ஸாநந்தி, ஜீவாவின் சிறுகதைகள் I&II. (ஆ) தமிழில் நாடகம். (மொ) கண்ணன் ஞானோபதேசம். (வ) ஆதிசங்கரர், இராஜாஜி, முதலிய பல நூல்கள். ஊ: தலைவர்—கவிஞர் பெருமன்றம், தமிழ் வாசகர் சங்கம், தென்னிந்தியப் பக்தியாளர் பெருமன்றம், நாடகக் கழகம். துணைத் தலைவர்—பாரதியார் சங்கம், தேசிய இலக்கிய மன்றம், சென்னைக் கம்பர் கழகம், தமிழ்நாடு மக்கள் பேரவை,

834. நாராயணசாமி, பெ. (நாவலன்)

அ: இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்; 1671, ஜாலான் கம்போங் பங்காளி பட்டர்வோர்த், பினாங்கு. ஆ: 29-7-1946; 1970. இ: ஆங்கிலம், மலாய், தெலுங்கு. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள். எ: சயாம், இந்தியா.

835. நாராயணன், இராம. (அருள்வண்ணன்)

அ: தமிழாசிரியர்; 13, மேட்டுக் கண்ணன் தெரு, சேலம்—636001. ஆ: 19-7-1929; 1951. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

836. நாராயணன், வெ. (பரந்தாமன்)

அ: பத்திரிகையாளர்; பரந்தாமன் பதிப்பகம், 22, உஸ்மான் ரோடு, சென்னை—600017. ஆ: 13-4-1913; 1938. இ: ஆங்கிலம்,

மலையாளம். ஈ: (க) பரந்தாமன் பார்வையில், இராஜாஜி 100க்கு 100. எ: இலங்கை.

837. நாராயணன், ஏ.வி. (ராண்டார்)

அ: பத்திரிகையாளர்; 99, சிரீநகர் காலனி, சென்னை—600015. ஆ: 15-10-1930; 1955. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (க) அண்ணா இல்லாத தீபாவளி, தாய்க்குப் பெயரிட்ட தலைவர். எ: பர்மா.

838. நாராயணன், எம்.கே.

அ: புளோக் 157, 1213-பி, லோரோங்-1, தோபாயோ, சிங்கப்பூர்—12. ஆ: 18-12-1937; 1957 இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள். எ: இந்தியா, மலேசியா.

839. நிஜாமுத்தீன், எஸ். (குலசை. எஸ். நிஜாமுத்தீன்)

அ: விற்பனையாளர்; 7-8, கீழப்புதுத் தெரு, குலசேகரப் பட்டினம்—628206. ஆ: 2-10-1949; 1973. இ: ஆங்கிலம், அரபு. ஈ: பல கவிதைகள். (தொ) படைப்புக்கெல்லாம் மூலநபி (ஸல்).

840. நீதிவாணன், ஜெ.

அ: தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை—625021. ஆ: 15-10-1938; 1962. இ: ஆங்கிலம். ஈ: (க) நடையியல், பல ஆய்வுக் கட்டுரைகள். எ: அமெரிக்க ஐக்கிய நாடு.

841. நீலபத்மநாபன்

அ: உதவி நிர்வாகப் பொறியாளர் (மின் இயல்); 36/1684-1, குரியாற்றிரோடு, மணக்காடு அ. நி., திருவனந்தபுரம்—695009. ஆ: 26-4-1938; 1951. இ: ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ: (பு) தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம், ஃபைல்கள், உறவுகள், மின் உலகம், யாத்திரை, நேற்று வந்தவள். (சி) மோகம் முப்பது ஆண்டு, சண்டையும் சமாதானமும், மூன்றாவது நாள், இரண்டாவது முகம், நாகம்மாவா, சிறகடிகள். (கவி) நீல பத்மநாபன் கவிதைகள். (க) சிதறிய சிந்தனைகள். உ: இவருடைய 'உறவுகள்' எனும் புதினம் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு பெற்றது.

842. நீலா ராமமூர்த்தி. (நீலு)

அ: எழுத்தாளர்; 5, பட்டம்மாள் தெரு, சென்னை—600028. ஆ: 11-1-1923; 1949. ஈ: (பு) கமலாவின் டைரி, குங்குமம், கல்யாணியின் கனவு. (கு) மாணவன் ஞானமணி, நீலாம்பரி. (கவி) ஸ்துதி மணிமாலை.

843. நெடுமாறன், முரசு. (அதியமான்)

அ: ஆசிரியர்; 460, ஜாலான் ஜெரிங் பண்டமரன், போர்ட் கெலாங், மேற்கு மலேசியா. ஆ: 14-1-1937; 1958. இ: ஆங்கிலம், மலாய். ஈ: (கு) இளந்தளிர். எ: மலேசியா, இந்தியா.

844. நெல்லையப்பன், மு. (பேரன்பன்)

அ: தமிழாசிரியர்; 9, பழைய அஞ்சலக வீதி, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம். ஆ: 15-8-1932; 1947. இ: ஆங்கிலம், ஈ: பல கவிதைகள்.

845. பக்கிரிசாமி, சோம. (மன்னை இளமதிகாந்தன்)

அ: ஆசிரியர்; அரித்திராநதி அ.நி., மன்னை—614012. ஆ: 15-6-1946; 1960. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

846. பக்கிரிசாமி, த. (கலைக்கோவன்)

அ: செய்தி நிருபர்; 51, செட்டியார் தெரு, பட்டுக்கோட்டை—614601. ஆ: 25-8-1939; 1951. இ: ஆங்கிலம். ஈ: (க) அண்ணாவின் வாழ்விலே.

847. பக்கிரிசாமி, மீ. (வெளிவை. மீ.ப.சாமி)

அ: எழுத்தாளர்; 32, காரியான்குடி செட்டித் தெரு, வெளிப் பாளையம், நாகப்பட்டினம்—611001. ஆ: 6-2-1956; 1969. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (கு) நாகத்தீவு.

848. பக்கிரிசாமி, வி. (திலீபன்)

அ: முதுநிலை உதவியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம்; 46-எச், குருசாமி பிள்ளை தெரு, விழுப்புரம்—605602. ஆ: 12-6-1932; 1946. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: பல சிறுகதைகள், குறுநாவல்கள். உ: ஆனந்தவிகடன் நடத்திய தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு; தினமணி கதிர் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றவர்.

849. பக்தவத்சலம், கெ. (கலைக்கோட்டி)

அ: சென்னை மாநகராட்சியில் மேற்பார்வையாளர்; 29, நம்மாழ்வார் தெரு, சென்னை—600001. ஆ, 12-12-1939; 1955. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (வ) வேதநாயகர்.

850. பக்தவத்சலன், கி.மா. (சந்திரா)

அ: ஆசிரியர்; 121, சீரங்கம்மாள் தெரு, சென்னை—600021. ஆ: 2-6-1927; 1950. இ: ஆங்கிலம். ஈ: (க) வாழ்க்கை நலம், குழந்தையும் செல்வமும். (நா) அசோகன், ராணி பத்மினி, ஒரு லட்சம், தமிழ் வளர்த்த கூத்தன், வீரச் சிறுவன். (வ) விலங்குகள் கதை, தபால் தலையின் கதை. (சி) நீதிக்கதைகள், பாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், தெனாலிராமன் கதைகள், விக்கிரமாதித்தன் கதை. உ: அசோகன் எனும் நாடகம் தமிழக அரசின் பரிசு பெற்றது.

851. பக்தவத்சலன், பி. எஸ். கே. (பொன்னீலன்)

அ: ஆசிரியர்; மணிகட்டிப் பொட்டல், (வழி) ஈத்தாமொழி, குமரிமாவட்டம். ஆ: 15-12-1960. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (பு) கரிசல், (நா) அக்னி நட்சத்திரம்.

852. பகதூர்சா, அ. (நாஞ்சில் சா)

அ: ஆசிரியர்; சீதக்காதி பண்ணை, சென்னை—600048. ஆ: 27-4-1939; 1957. இ: ஆங்கிலம், மலையாளம், அரபு. ஈ: (கவி) பாமாலை, இசை அமுதம், பெண்மணியும் கண்மணியும். (நா) கண் திறந்தது, வீர சொர்க்கம்.

853. பச்சைமால், கு.

அ: தமிழாசிரியர்; செட்டிவிளை சாமிதோப்பு அஞ்சல், (வழி) சுசீந்திரம், குமரி மாவட்டம். ஆ: 4-7-1967. ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

854. பச்சையப்பன், இர. மா. பெ. (பண்பரசன்)

அ: ஆசிரியர்; 24, தாசர்புரம், திருநின்றவூர்—602024. ஆ: 15-7-1933; 1952. இ: ஆங்கிலம். ஈ: (சி) காதலா கடமையா, ஆணும் பெண்ணும். (க) சீர்திருத்தவாதி.

855. பசீர் அகமது, எம். ஏ. (சீர்காழி இறையன்பன்)

அ: 3-102, ஜவஹர் தெரு, சீர்காழி—609110. ஆ: 1945; 1960. இ: ஆங்கிலம், இந்தி, அரபு. ஈ: (கவி) இறையன்பன் பாடல்கள்,

856. பசுபதி, அ. (தேவமைந்தன்)

அ: விரிவுரையாளர்; எச்-3, அரசு குடியிருப்பு, பாண்டிச்சேரி—605008. ஆ: 11-3-1958; 1964. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (கவி) உங்கள் தெருவில் ஒரு பாடகன்.

857. பசுபதி, ம. வே. (சாணக்கியன்)

அ: தமிழ்த் துணைப் பேராசிரியர்; 7, சன்னதித் தெரு, திருப்பனந்தாள்—612504. ஆ: 21-8-1942; 1964. இ: தமிழ். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

858. பசுலு முகியித்தீன், செ. (வெற்றிச் செல்வன்)

அ: பேராசிரியர்; 6, வையாளி வீதி, கோட்டாறு, நாகர்கோவில்—2, குமரிமாவட்டம். ஆ: 27-4-1936; 1954. இ: ஆங்கிலம், இந்தி, உருது, அரபு. ஈ: பல கட்டுரைகள். எ: இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்.

859. பஞ்சநாதன், எஸ். (பஞ்சு)

அ: பத்திரிகை நிருபர்; 37, ஜாலான் அம்பாங், கோலம்பூர், மலேசியா. ஆ: 18-31943; 1958. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள். எ: இந்தியா, தாய்லாந்து, கிழக்கு மலேசியா, ஆஸ்திரேலியா.

860. பஞ்சவர்ணம், சௌ. பா.

அ: ஆசிரியை; 31, பெஸ்ட் வீதி, திங்காஞ்சன், இரங்கூன், பர்மா. ஆ: 20-11-1951; 1975. இ: ஆங்கிலம், பர்மிய மொழி. ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள்.

861. பஞ்சாட்சரம், ந. (சரம்)

அ: பத்திரிகை நிருபர்; 39, கொண்ணூர் பெரிய சாலை, அயன்புரம், சென்னை—600023. ஆ: 12-3-1923; 1943. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள்.

862. பட்டாபிராமன், கா. (கா. ப. ரா.)

அ: துணைத் தமிழ்ப் பேராசிரியர், அரசு கல்லூரி, கிருட்டிணகிரி. ஆ: 1-2-1939; 1957. இ: ஆங்கிலம். ஈ: பல சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள்.

863. பட்டாபிராமன், பி.எம். (பரபன்)

அ: பத்திரிகை நிருபர்; 170, பழைய சப்-ஜெயில் தெரு, புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி—635001. ஆ: 1927; 1945. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (பு) வாழ்க்கைப் படகு, சினிமா நடிகை, வாழ்க்கை டைரி, சித்ரலேகா.

864. பட்டுக்கோட்டை குமாரவேல்

அ: நாடக ஆசிரியர், சென்னை வானொலி நிலையம்; 6, சோலையப்ப முதலி தெரு, மயிலாப்பூர், சென்னை—600004. ஆ: 26-2-1925. 1950. இ: ஆங்கிலம். ஈ: (பு) சிவப்பு முல்லை, நிழல், சந்தனக்கோப்பை, அனலும் புனலும். (நா) மனமாளிகை.

865. பண்டாரம், இ. (கவிஞர் உமைமகன்)

அ: ஆசிரியர்; 2/18 உமாபதி இல்லம், கருங்குளம் அ.நி., ஸ்ரீவைகுண்டம் வட்டம், நெல்லை மாவட்டம். ஆ: 15-10-1947; 1964. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

866. பத்துமலை, எ. (எ. ராதாபத்துமலை)

அ: தென்னமரத் தோட்டம், பத்தாங்பெர்சுந்தை, சிலாங்கூர். ஆ: 17-6-1949; 1969. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள். எ: இந்தியா.

867. பத்மநாபன், பி. (தாமரைச் செல்வன்)

அ: கவிஞர்; 67, ஒற்றை வீதி, திருவானைக்காவல், திருச்சி—620005. ஆ: 10-7-1940; 1962. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

868. பத்மநாபன், எம்.எஸ். (மாராடி. பத்மா)

அ: மருந்தாளுநர்; மாராடி அஞ்சல், அஞ்சல், (வழி) கோட்டபாளையம், திருச்சி மாவட்டம். ஆ: 14-1-1946; 1969, இ: பல சிறுகதைகள்.

869. பத்மநாபன். எஸ். (சிவம்)

அ: 20, இந்திய அரசு வங்கி குடியிருப்பு, இராமவர்மபுரம், நாகர்கோவில்—1, குமரிமாவட்டம். ஆ: 31-3-1924; 1948. இ: ஆங்கிலம். ஈ: (க) நாகராஜர் ஆலயம், குமரி மாவட்டக் கோயில்கள், தென்குமரியின் புதைந்த வரலாறு, கன்னியாகுமரி—உள்ளும் புறமும், இராமேஸ்வரம், தென்னகத் திருக்கோயில்கள்.

870. பரந்தாமன், ரா.கி. (ஜகதாசரண்)

அ: தட்டெழுத்தர்; 22, கிழக்கு ரயில்வே கேட், கொளத்தூர் சாலை, ஔவை நகர், வில்லிவாக்கம், சென்னை—600049. ஆ: 1925; 1950. இ: இந்தி, ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள்.

871. பரந்தாமனார், அ.கி.

அ: தமிழாசிரியர் (ஓய்வு); 19, முத்து முதலி தெரு. வேப்பேரி அஞ்சல் நிலையம், சென்னை—600007. ஆ: 15-7-1902; 1928. இ: ஆங்கிலம். ஈ: (க) நல்ல தமிழ் எழுதவேண்டுமா? கவிஞராக, வாழ்க்கைக் கலை, பன்னிரு கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், தமிழ் இலக்கியம் கற்க, திருக்குறளும் புதுமைக் கருத்துகளும். (கவி) மறுமலர்ச்சிக் கவிதைகள், எங்கள் தோட்டம். (வ) மதுரை நாயக்கர் வரலாறு, திருமலைநாயக்கர் வரலாறு. (மொ) காமக்களிமகன் கோமஸ், மானிடன் செய்த மாண்புறு செயல்கள். உ: எங்கள் தோட்டம் என்னும் நூல் மத்திய அரசின் பரிசு பெற்றது.

872. பரமகுரு, பொன். (தேரையர்)

அ: காவல்துறைத் தலைவர்; 67, ஸ்பர் டேங்க் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை—600031. ஆ: 15-4-1926; 1940. இ: ஆங்கிலம், தெலுங்கு, இந்தி. ஈ: (நா) வினை விதைத்தவர்கள். பல சிறுகதைகள், கட்டுரைகள்.

873. பரமசிவம், சொ.

அ: துணைத் தமிழ்ப் பேராசிரியர்; 1269, அண்ணா நகர், சென்னை—600040. ஆ: 15-7-1934; 1952. இ: ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம். ஈ: (க) கல்லூரித் தமிழ் இலக்கணம். (வி) மனோன்மணீயம்.

874. பரமசிவம், மு. (பூவரசன்)

அ: ஆயர்மானீஸ் எஸ்டேட், மூவார், ஜோகூர், மலேசியா. ஆ: 15-8-1926; 1951. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள்.

875. பரமசிவன், க. (பறைவான்)

அ: தட்டெழுத்து- சுருக்கெழுத்து ஆசிரியர்; 118-ஏ, சத்தியமூர்த்தி சாலை, ஆரணி—632301. ஆ: 20-11-1932; 1947. இ: ஆங்கிலம். ஈ: (க) ஏன் சாதியை ஒழிக்கவேண்டும்? எப்படி?

தட்டெழுத்துப் பொறியின் பொறியியல் விளக்கம். (பு) புலவர் மாணிக்கம், இரட்டைத் தீவு. (கவி) பரமசிவன் கவிதைகள், குமரி மகள், கிராம இயக்கம், சமாதானக் குரல், தமிழ்நாடு. உ: இந்திய அரசின் முதியோர் கல்வி இலக்கியப் பரிசு பெற்றவர்.

876. பரமசிவன், தெ.கு. (தமிழ்தயன்)

அ: ஆசிரியர்; கன்னிமாரம்மன் கோவில் தெரு, தென்காசி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம். ஆ: 8-9-1945; 1966. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள்.

877. பரமசிவானந்தம், அ.மு. (உவகை)

அ: தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு); 18, ஐயாவுநாயுடு தெரு, ஷெனாய் நகர், சென்னை—600030. ஆ: 5-7-1914; 1928. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: வையைத் தமிழ் முதலிய ஐம்பதுக்கும் மேற்பட்டவை. உ: கவிதையும் வாழ்க்கையும் எனும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது; 'கூடி வாழ்' மத்திய அரசின் பரிசு பெற்றது. எ: மலேசியா, இலங்கை.

878. பரமானந்தம், கு. (தீவட்டி)

அ: எழுத்தாளர்; 14, அப்பாசாமி முதலி தெரு, சேத்துப்பட்டு, சென்னை—600031. ஆ: 15-6-1935; 1971. இ: ஆங்கிலம். ஈ: பல நாடகங்கள்.

879. பரமேசுவரி, சி. (தமிழச்சி)

அ: ஆசிரியை; வடசேரி அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம். ஆ: 17-6-1942; 1964. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள். (நா) வாழ்வில் இன்பம்.

880. பரிமணம், அ.மா.

அ: தமிழ்ப்பேராசிரியர், புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சை மாவட்டம். ஆ: 15-1-1923; 1955. இ: ஆங்கிலம். ஈ: (க) இயற்கை நாட்டியம், (ப) வையாபுரிப் பள்ளு, வீரையன் அம்மானை.

881. பரிமளரங்கன், தி.இரா. (பொன்மலை பரிமளம்)

அ: 775, அன்பழகன் தெரு, கலைஞர் கருணாநிதி நகர், திருச்சிராப்பள்ளி—620008. ஆ: 6-6-1935; 1950. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள்.

882. பலராமன், கோ.ச.

அ: ஹோமியோபதி மருத்துவர்; 207, மாப்பிள்ளை சுப்பராஜா தெரு, இராஜபாளையம்—626117. ஆ: 6-9-1933; 1965. ஈ: (கவி) ரசிகன், கணக்கு.

883. பழநி, உ.

அ: தமிழ் விரிவுரையாளர் (ஓய்வு); 41, பழைய பண்டிதர் குடியிருப்பு, அண்ணாமலை நகர்—608101. ஆ: 7-5-1919. இ, ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள். எ: சிங்கப்பூர், கோலாலம்பூர், நைரோபி, மொரீஷியசு.

884. பழநி, வை. (பிரேம்குமார்)

அ: ஆசிரியர்; 29, படேல் வீதி, புவனேசுவரிப் பேட்டை, குடியேற்றம்—632602. ஆ: 28-5-1947; 1964. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: பல கவிதைகள்.

885. பழநியப்பன், ச. (இந்து மணாளன்)

அ: நிருவாகப் பொறியாளர்; 50, இராமபிள்ளை சந்து. தெற்கு வாசல், மதுரை—625001. ஆ: 6-1-1942; 1958. இ: ஆங்கிலம், இந்தி, மலையாளம், நார்ஸ்க் (நார்வே மொழி). ஈ: பல கட்டுரைகள், கவிதைகள். எ: நார்வே, டென்மார்க், சுவீடன், இத்தாலி, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து.

886. பழநியாண்டி, சி.ஆர். (அன்புப்பழம்நீ)

அ: 93, திருப்பள்ளித் தெரு, சென்னை—600001. ஆ: 13-12-1922; 1938. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (க) பேச்சுக்கலை, (தொ) காண்டேகர் மணிமொழிகள், அண்ணாவின் சொற்செல்வம். எ: இலங்கை.

887. பழமலை, த. (பழம்)

அ: துணைத் தமிழ்ப் பேராசிரியர், அரசினர் கலைக்கல்லூரி, கடலூர்—607001. ஆ: 3-2-1943; 1958. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள்.

888. பழனி, நா. (கலாரசிகன்)

அ: மே/பா. சி. சரவணன், மேல்மாம்பட்டு, காடாம்புலியூர்—607103. ஆ: 15-6-1949; 1969. இ: ஆங்கிலம், மலையாளம், இந்தி. ஈ: பல கவிதைகள்.

889. பழனி, மு. (இராகுலதர்சன்)

அ: தமிழ் விரிவுரையாளர், ஸ்ரீசேவுகன்-அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை, முகவை மாவட்டம் ஆ: 30-12-1944; 1965. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள்.

890. பழனிச்சாமி, இலிங்கி. (பாசூர்—பழம்)

அ: தமிழாசிரியர்; "பெரிய மடம்", பாசூர்-638154. ஆ: 1-7-1944; 1962. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள்.

891. பழனிச்சாமி, மா. (மாயா)

அ: ஆசிரியர்; தும்மலப்பட்டி அ.நி, (வழி) கெங்குவார்பட்டி, மதுரை மாவட்டம். ஆ: 26-6-1935; 1960. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள்.

892. பழனிச்சாமி, எஸ்.எஸ். (அழகு பழனிச்சாமி)

அ: ஏவலர்; மே/பா. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 107, பெரிய தெரு, சென்னை-600005. ஆ: 7-11-1934; 1955. ஈ: பல சிறுவர் சிறுகதைகள், குழந்தைப் பாடல்கள்.

893. பழனிசாமி, அ.

அ: உறுப்பினர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு; 1, முதல் மெயின்ரோடு, இராமகிருஷ்ணா நகர், சென்னை—600028. ஆ: 1920; 1957. இ: ஆங்கிலம். ஈ: (க) சர்வதேசச்சட்டம். உ: தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர். எ: அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ்.

894. பழனிசாமி, க.பெ. (கல்வெட்டூர்க் கவிராயகேசரி)

அ: தணிக்கையாளர்; 1ஏ, வ.உ.சி. தென்வடல் மெயின் ரோடு, தில்லைநகர், கோயமுத்தூர்—641026. ஆ: 5-12-1933; 1948. இ: ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ: (கவி) சக்திக்கனல் கவிதைகள், கனகாம்பரமும் டிசம்பர் பூக்களும். (க)கூட்டுறவுத் தணிக்கை. (ப) அண்ணன்மார் சுவாமி கதை. (கா) புழுதிப்புயல.

895. பழனிசாமி, சு. (சுபமி)

அ: உதவியாளர், மீன் வளர்ச்சிக் கழகம், 46-டி, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை—600017. ஆ: 5 5-1947; 1965. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், சிறுகதைகள்.

896. பன்னீர்செல்வம், ப. (வளையாபதி)

அ: 10 சி. முத்தையா முதலி தோட்டத் தெரு, இலாயிட்ஸ் சாலை, சென்னை – 600014. ஆ: 6-9-1953; 1973. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், சிறுகதைகள்.

897. பாக்கியநாதன், வே.இ.

அ: விரிவுரையாளர்; மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 20-4-1932; 1947. இ: ஆங்கிலம், ஜெர்மன். ஈ: பல கட்டுரைகள். எ: இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான்.

898. பாக்கியம், அ. (மகிமை-பாவிசைக்கோ)

அ: அச்சுத்தொழில் 7, தூய சோன்சு சாலை, பெங்களூர்—560042. ஆ: 15-12-1942; 1957. இ: ஆங்கிலம், கன்னடம். ஈ: பல கட்டுரைகள், பாடல்கள்.

899. பாக்கியம்முத்து

அ: தமிழாசிரியை; எல்.பி.எஸ். 42, பிளாக்காங் மருத்துவ மனை, சுங்கைப்பட்டாணி, கெடா. ஆ: 2-4-1943; 1967. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள்.

900. பாக்கியராஜன், இ (மண்டூர் இராஜன்)

அ: எழுது வினைஞர், "பூம்புகார்," மண்டூர், இலங்கை. ஆ: 10-12-1946; 1966. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: பல கட்டுரைகள்.

901. பாண்டியன், இரா. (மதுரைமாறன்)

அ: முடிதிருத்துநர்; 12, ஜலான் பெர்கின்ஸ், கோலாலம்பூர், மலேசியா. ஆ: 10- 1-1940; 1960. ஈ: (கவி) தண்ணீர்மலையப்பன் திருப்புகழ்ச்சிமாலை.

902. பாண்டியன், ம. சு. (ஜெயசுபா)

அ: 8, உப்புக்கார தெரு, மன்னார்குடி—614001. ஆ: 12-3-1953; 1967. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள்.

903. பாண்டுரங்கன், கி.

அ: தமிழ்ப்பேராசிரியர்; 3, இராமானுசம் தெரு, தியாகராய நகர், சென்னை—600017; ஆ: 12-6-1931; 1956. இ: ஆங்கிலம்,

ஈ: (பு) மழலைச்சிலம்பு. (க) புலமைசால் புரவலர். ஊ: தேசிய மாணவர் படையின் மேஜர் நிலையில் பணிபுரிந்துள்ளார்.

904. பாண்டுரங்கன், ந. (சகாயபுத்திரன்)

அ: நூலக உதவியாளர்; 15, மேலச் செட்டித் தெரு, மதுரை — 625001. ஆ: 19-6-1950; 1968. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

905. பாண்டுரங்கன், நா.

அ: தமிழ்ப் பேராசிரியர்; 1, அம்மையப்ப முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை—600014. ஆ: 27-8-1927; 1948. இ: ஆங்கிலம். ஈ: (க) உலகக் கவிஞர் தாகூர். (சி) நான்கு கண்கள், இயற்கை சிரிக்கிறது, தாஜ்மகால், தமிழ் தந்த இன்பம். உ: தமிழக அரசின் இலக்கியப் பரிசு ரூ 1000 பெற்றவர். ஊ: திரைப்படங் களுக்கு உரையாடலும் பாடல்களும் எழுதியுள்ளார்.

906. பாத்திமா, சீ. எம்.

அ: எழுதுவினைஞர்; பள்ளிவாயல் வீதி, புதிய காத்தான்-குடி—3, இலங்கை. ஆ: 24-4-1958; 1975. இ: ஆங்கிலம், ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள்.

907. பாப்பு இராமநாதன், பா. (வைரம்)

அ: தமிழாசிரியர்; பேரையூர் — 626703. ஆ: 6-8-1922; 1944. ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள்.

908. பாபுல், வே. ப.

அ: பொதுநலத்துறை தேர்வுநிலை ஆய்வாளர் (ஓய்வு); எருமப்பட்டி, நாமக்கல், சேலம் மாவட்டம். ஆ: 1-7-1914; 1948. இ: ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, இந்தி, அரபு. ஈ: (கவி) விடுகவி நூறு.

909. பாமணி, பெ. ச.

அ: துணைப் பேராசிரியர்; 3/840, பாரதி நகர், பரமக்குடி, இராமநாதபுர மாவட்டம். ஆ: 15-7-1936; 954. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (கவி) அழகு முல்லை. (நா) திலகம், சாகா வரம். ஊ: ஆயிர வைசியன் எனும் மாத இதழின் சிறப்பாசிரியர். ஏ: இலங்கை.

910. பார்த்தசாரதி, நா. (மணிவண்ணன்)

அ: ஆசிரியர், 'தினமணி கதிர்' வார இதழ்; 1, எக்ஸ்பிரஸ் எஸ்டேட், சென்னை-600002. ஆ: 18-12-1932; 1952. இ: ஆங்கிலம், வடமொழி, இந்தி. ஈ: (சி) வலம்புரிச் சங்கு, மூவரை வென்றான், நெருப்புக் கனிகள், மங்கியதோர் நிலவினிலே, புதிய பாலம், வேனில் மலர்கள், தகடூர் யாத்திரை, தமிழிலக்கியக் கதைகள், தலைமுறை இடைவெளி, பூக்களை யாரும் மிதிக்கக் கூடாது, இராஜகோபுரம், காலத்துக்கு வணக்கம், கண்ணன் கதைகள், கங்கை இன்னும் வற்றிவிடவில்லை, தூங்கும் நினைவுகள், தேவதைகளும் சொற்களும், ஒப்புரவு, பிரதிபிம்பம், புறநானூற்றுச் சிறுகதைகள், இது பொதுவழி அல்ல. (பு) குறிஞ்சி மலர், பொன் விலங்கு, பட்டுப்பூச்சி, நெற்றிக்கண், கபாடபுரம் மலைச்சிகரம், பண்டிமாதேவி, மணிபல்லவம், பிறந்த மண், நினைவின் நிழல்கள், நீல நயனங்கள், அறத்தின் குரல், இலையுதிர் காலத்து இரவுகள், வெற்றி முழக்கம், அனிச்ச மலர், மனக்கண், கோபுர தீபம், நெஞ்சக் கனல், வஞ்சிமா நகரம், சமுதாய வீதி, ஆத்மாவின் ராகங்கள், நித்திலவல்லி, மகாத்மாவைத் தேடி, சத்திய வெள்ளம், கற்சுவர்கள், துளசி மாடம். (கவி) மணிவண்ணன் கவிதைகள், கடற்கரை நினைவுகள். (க) புது உலகம் கண்டேன், நானூற்றில் நல்ல காட்சிகள், (ஆ) சொல்லின் செல்வம், கவிதைக் கலை, மொழியின் வழியே, புதிய பார்வை. (மொ) வீரேசலிங்கம். உ: 'சமுதாய வீதி' சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. ஊ: தீபம் என்னும் இலக்கிய இதழின் நிறுவக ஆசிரியர்.

911. பார்த்தசாரதி, மு. (மு. வலவன்)

அ: ஓவியர்; 96/2, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை—600004. ஆ: 21-8-1945; 1959. இ: ஆங்கிலம். ஈ: (கவி) சொற்கோலம். (நா) அமுதக்கனி.

912. பார்த்தசாரதி, வா. கோ. (பரதேசி)

அ: ஆசிரியர்; சீனிவாசநல்லூர்—621209. ஆ: 3-12-1923; 1946. இ: இந்தி, வடமொழி, கன்னடம். ஈ: (கவி) புளியஞ் சோலையிலே, காணாத கனவுகள். (மொ) மின்னல் கொடியாள்.

913. பார்த்தசாரதி, ஜே. (அறன்)

அ: தமிழ்த் துணைப் பேராசிரியர்; 21ஏ, வேப்பஞ்சாலைத் தெரு, திண்டிவனம்—604001. ஆ: 2-11-1940; 1960. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (கவி) அண்ணா அண்ணா.

914. பார்த்தசாரதி, டி. எஸ்.

அ: இரயில்வே நிர்வாகி (ஓய்வு); 20, முதல் குறுக்குத் தெரு, மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை—600035. ஆ: 8-9-1913; 1938. இ: ஆங்கிலம், வடமொழி, வங்காளம், தெலுங்கு, இந்தி, கன்னடம். ஈ: (நா) பிரகலாதபக்தி விஜயம். (வ) கவிக்குயில். (ஆ) அருணகிரி நாதரும் திருப்புகழும். (மொ) மகாத்மாகாந்தி, தியாகராஜ சுவாமிகளின் பாடல்கள், ரவீந்திரர் நாடகத் திரட்டு. எ: இலங்கை, பாகிஸ்தான்.

915. பார்த்திபன், இரா. (கவிப்பிரியன்)

அ: வேளாண்மை; வயலூர்—604502. ஆ: 9-10-1954; 1969, இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

916. பாரூக், கே. எம். (கலைநிதி)

அ: வியாபாரம்; பிரதான வீதி, பதியதளால, இலங்கை. ஆ: 7-10-1948; 1967. இ: சிங்களம். ஈ: (கவி) தேன் துளி. (சி) வாடா மலர்.

917. பால் திருவள்ளுவன், சோ.

அ: 59, சிவன் தெற்கு ரத வீதி, பாளையங்கோட்டை. திருநெல்வேலி–627002. ஆ: 3-11-1959; 1975. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

918. பாலகிருட்டிணன், க. (க. தமிழமல்லன்)

அ: ஆசிரியர்; 168, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ் சாவடி, புதுச்சேரி—605009. ஆ: 1-7-1949; 1970. இ: ஆங்கிலம். ஈ: (க) தனித்தமிழ், பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு.

919. பாலகிருஷ்ண நாயுடு, இ.

அ: வேளாண்மை; சாந்தி சினிமா கட்டிடம், அவிநாசிப் பாதை, பீளமேடு, கோயமுத்தூர்—641004: ஆ: 14-2-1900. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (பு) சங்ககிரிக் கோட்டை, ராணி மீனாட்சி முதலிய 16 புதினங்கள்.

920. பாலகிருஷ்ணன், மு.

அ: தமிழ் விரிவுரையாளர்; பி-3, மதுரைப் பல்கலைக்கழக அலுவலர் குடியிருப்பு, பல்கலை நகர், மதுரை—625021. ஆ: 7-4-1934; 1971. இ: ஆங்கிலம். ஈ: பல ஆய்வுக் கட்டுரைகள்,

921. பாலகிருஷ்ணன், பி. இ.

அ: 102, பிடாரியார் கோவில் தெரு, சென்னை—600001. ஆ: 18-4-1930; 1955. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (நா) முழத்துணி, அவனும் திருந்தினான். (கு) ஏமாந்த நாய்க்குட்டி, கறுப்புப் பூனை, பயந்த குரங்குக்குட்டி, சிறந்த பையன், முட்டாள் முயல்கள், மூன்று தவளைகள், அன்னை கஸ்தூரிபாய், கவியரசி சரோஜினி நாயுடு, சின்னஞ் சிறு வயதில் காந்தித்தாத்தா. எ. சோவியத் நாடு.

922. பாலகிருஷ்ணன், எஸ். ஆர். (இளங்கோ)

அ: தையற்கலைஞர்; 42, மோதிலால் மேன்ஷன், மாதுங்கா, பம்பாய்—400019. இ: தெலுங்கு, இந்தி. ஈ: (சி) ஜனதா எக்ஸ்பிரஸ்.

923. பாலச்சந்திரன், இ. (பாலா)

அ: ஆசிரியர்; 78/5, அன்னை அலமேலு காம்பவுண்டு, திலகர் திடல், புதுக்கோட்டை—622001. ஆ: 24-12-1946; 1968. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள். (தொ) நீ (2 பாகங்கள்)

924. பாலசந்திரன் ஜேகப் (மதுரை இளமதியன்)

அ: இருப்புப்பாதை மேற்பார்வையாளர், தெற்கு இரயில்வே, கரூர். ஆ: 9-2-1930; 1942. இ: ஆங்கிலம், தெலுங்கு ஈ: (கவி) மணமக்கள் வாழ்க. ஊ: பல வானொலி நாடகங்களை எழுதி யுள்ளார்.

925. பாலசுந்தரம், செ. (செங்கதிர்)

அ: அஞ்சலக ஆய்வாளர்; 14, வைகை தெரு, பாரத் நகர், ஆதம்பாக்கம், சென்னை—600088. ஆ: 15-6-1946; 1959. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

926. பாலசுப்பிரமணியம், கு.மா. (வாலி)

அ: எழுத்தாளர்; 40, மாதவப் பெருமாள் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை—600004. ஆ: 13-5-1920; 1940. இ: ஆங்கிலம, இந்தி, தெலுங்கு. ஈ: (சி) இன்பத்துளிகள், சூடிய மலர். (கவி) முதற்குரல், தணிகைவேள் சதகம். (பு) அதிர்ஷ்டக் குழந்தை. (நா) காதல் தந்த இன்பம். உ: கலைமாமணி, கவிக் குயில். ஊ: தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர். எ: இலங்கை,

927. பாலசுப்பிரமணியம், பி. (சிற்பி)

அ: துணைப் பேராசிரியர்; 60, அழகப்பா குடி அமைப்பு, பொள்ளாச்சி. ஆ: 29-7-1936; 1955. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: (கவி) நிலவுப்பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்ப யாகம், மௌன மயக்கங்கள்.

928. பாலசுப்பிரமணியன், சி. (சி.பா.)

அ: தமிழ்ப் பேராசிரியர்; 19, செயம்மாள் தெரு, ஐயாவு நாயுடு குடியிருப்பு, அரும்பாக்கம், சென்னை—600029. ஆ: 10-5-1935; 1952. இ: ஆங்கிலம். ஈ: (வ) தமிழ் இலக்கிய வரலாறு, (க) கட்டுரை வளம், காரும் தேரும். வாழையடி வாழை, முருகன் காட்சி, உருவும் திருவும், இலக்கிய அணிகள், பெருந்தகை மு.வ. (ப) மனோன்மணியம். (ஆ) The Status of Women in Tamilnadu During the Sangam Age. உ: இலக்கிய அணிகள் என்னும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. எ: இலங்கை.

929. பாலசுப்பிரமணியன், நெ.

அ: எழுத்தர், பள்ளித்துணைஆய்வர் அலுவலகம், தூத்துக்குடி—628001. ஆ: 20-12-1946; 1964. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள்.

930. பாலசுப்பிரமணியன், தி.சு. (சுப்ர. பாலன்)

அ: கண்காணிப்பாளர், தமிழ்நாடு கல்லூரிக் கல்வி இயக்ககம்; 23, பாரதி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை—600033. ஆ: 11-5-1939; 1959. இ: ஆங்கிலம். ஈ: (சி) ஊமை மனங்கள்.

931. பாலசுப்பிரமணியன், மு.பி. (மணிவேந்தன்)

அ: தமிழ்த் துணைப்பேராசிரியர்; 124/3, அடுக்கு வீடுகள் (நடுவருவாய்ப் பிரிவு), அண்ணாநகர் மேற்கு. சென்னை—600040. ஆ: 16-5-1939; 1956. இ: ஆங்கிலம். ஈ: (க) இலக்கிய நெஞ்சம். சிறுபாணாற்றுப்படைச் செல்வம் (கவி) கவிதை மேகங்கள், எத்தனை கோடி இன்பம், சீனத்துப் பரணி. ஊ: தமிழகத் தமிழாசிரியர் கழகத் துணைத் தலைவராகவும், செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவராகவும் பணியாற்றியவர்.

932. பாலசுப்ரமணியம், பி. (தம்பி)

அ: இராணுவ வீரர் (ஓய்வு); மே/பா. அனுராதா டெக்ஸ் டைல்ஸ், 22, பி.என். ரோடு, திருப்பூர்—638602. ஆ: 19-10-1923;

1945. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள். எ: பாகிஸ்தான்.

933. பாலசுப்ரமணியன், சு. (கதிரவன்)

அ: தமிழாசிரியர்; பாளையம் அஞ்சல்—621107. ஆ: 28-8-1942; 1967. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (கு) ராஜாவின் ரோஜா, மணிவிழா மாமலர், மற்றும் பல கவிதைகள், கட்டுரைகள். உ: பாமணி, கவிமழை.

934. பாலசுப்ரமணியன், டி.கே. (மகரிஷி)

அ: ஸ்டோர் உதவியாளர், தமிழ்நாடு மின்வாரியம், சேலம்; 1பி, சென்னகிருஷ்ணபுரம் (ராஜாஜி ரோடு விரிவு), சேலம் - 636007. ஆ: 1-5-1932; 1950. இ: ஆங்கிலம். ஈ: (பு) பனிமலை, மண்ணின் மாண்பு, உயிர்த்துடிப்பு, மேகநிழல், வானத்து நிலவு, கலைந்த சுருதி, மகாநதி, எதிர்காற்று, அக்கினி வளையம், அண்ணா, புழுதிப் புயல், இலையுதிர் காலம், காந்தமுனை, ஊனக் கனவு, ஒன்றுக்குள் ஓராயிரம், துயரங்கள் உறங்குவதில்லை, தரையில் பிடித்த மீன், ஸ்படிகம், கடல்நுரை, பனிப்போர், நீச்சல் குளம், மண்புழு, வட்டத்துக்குள் ஒரு சதுரம், சாணக்கிய சபதம், பத்ரகாளி, சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, மேகச் சித்திரங்கள். (சி) தர்மத்தின் குரல்.

935. பாலதண்டபாணி, பா. (தாரை சௌதாமணாளன்)

அ: தமிழாசிரியர்; 89, நல்லம நாயக்கன்பேட்டை வீதி, தாராபுரம்—638656. ஆ: 6-8-1943; 1960. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (கவி) ஆயிரம் மலர்கள், கவிஞர் போற்றும் பெரியார்.

936. பாலமனோகரன், அ.

அ: ஆசிரியர்; தண்ணீரூற்று, முள்ளியவளை, இலங்கை. ஆ: 7-7-1942; 1971. இ: ஆங்கிலம். ஈ: (சி) தீபதோரணம். (பு) நிலக்கிளி, குமாரபுரம், கனவுகள் கலைந்தபோது.

937. பாலவர்மா ராஜ்குமார், எச். (சின்னக்குட்டி)

அ: பதிப்புத்துறை உதவியாசிரியர்; கிறித்துவ இலக்கியச் சங்கம், த.பெ. 501, சென்னை—600003. ஆ: 23-9-1965. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (கு) மாம்பழத் திருடர்கள், தங்கவசனக் கதைகள், காட்டின் நடுவே, சாது சுந்தர்சிங், பில்லிகிராமம். (தொ) நூறாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி.

938. பாலாம்பாள், வெ. (பாலா)

அ: விரிவுரையாளர்; 84, அப்பு முதலி வீதி, மயிலாப்பூர், சென்னை—600004. ஆ: 22-4-1938; 1978. இ: ஆங்கிலம், இந்தி, வடமொழி. ஈ: (வ) தென்னிந்தியக் குறுநில மன்னர்கள், பழு வேட்டரையர்கள். ஊ: Fellow of Royal Asiatic Society.

939. பாலன், சி.ஏ.,

அ: எழுத்தாளர்; 2, கனராவ் தெரு, ராஜாஜிநகர், சென்னை—600043. ஆ: 2-4-1921; 1966. இ: ஆங்கிலம், இந்தி, வடமொழி, தமிழ். ஈ: (பு) நிலவும் நட்சத்திரங்களும். (க) தூக்கு மரநிழலில், சிறைப்பறவை. 30 புதினங்களை மொழிபெயர்த்துள்ளார்.

940. பாலு, நாமக்கல் ரா.

அ: கவிஞர்—திரைப்படத் துணை இயக்குநர்; 1, பி. பிளாக், 18வது அவின்யூ, அசோக்நகர், சென்னை—600083. ஆ: 6-8-1927; 1943. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள். ஊ: நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் மகன்; திரைப்படங் களுக்குப் பாடல், வசனம் எழுதியிருக்கிறார்.

941. பாலுசாமி, நா.

அ: தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை—625009. ஆ: 10-7-1923; 1948. இ: ஆங்கிலம், தமிழ். ஈ: (க) தமிழக வேந்தர், இயந்திரப் புரட்சி, வாழ்க்கைச் சோலை. (ஆ) வினை செயல்வகை, மணிமேகலை ஆராய்ச்சிக் கட்டுரைகள். உ: செஞ் சொற் கண்டமாருதம். எ: சிங்கப்பூர், மலேசியா.

942. பாலேஸ்வரி

அ: ஆசிரியை; 157, டைக்வீதி, திருக்கோணமலை, இலங்கை. ஆ: 9-12-1928; 1966. இ: ஆங்கிலம். ஈ: (பு) சுடர்விளக்கு. பூஜைக்கு வந்த மலர், சுமைதாங்கி, உறவுக்கப்பால். எ: இந்தியா,

943. பாவாடைசாமி, த. (சித்திரை)

அ: பள்ளிமுதல்வர்; 36-13, சிலிகி வீடுகள், சிங்கப்பூர்—7. ஆ: 1926; 1953. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், சிறுகதைகள்.

944. பாஸ்கரதாஸ், ஈ.கோ. (பாசு)

அ: துணைப் பேராசிரியர்; 27, ஐம்பது அடித் தெரு, கிருஷ்ணசாமி நகர், கோயமுத்தூர்—641018. ஆ: 19-6-1934; 1954.

இ: ஆங்கிலம், தமிழ். ஈ: பல கட்டுரைகள். (மொ) என்றும் வாழும் புத்தகங்கள்.

945. பிச்சைப்பிள்ளை, சாமி. (அறவணன்)

அ: தமிழ்த் துணைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி, அரியலூர். ஆ: 4-6-1942; 1967. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள்.

946. பிச்சையா, அ. (அசரீரி)

அ: பத்திரிகை ஆசிரியர்; 53/1, அவல்கார் தெரு, வேலூர்—632001. ஆ: 19-2-1934; 1956. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: 105 சிறு கதைகள், பல கவிதைகள், கட்டுரைகள்.

947. பிர்மானந்தம், பெ. (நிறைமகிழ்வன்)

அ: ஓவியர்; 61பி, மில் தெரு, வேளூர்—614724. ஆ: 10-6-1946; 1960. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

948. பிரசாத் ரிச்சர்ட் (பிரபு)

அ: வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளர், கிறிஸ்தவக் கலைத் தொடர்பு நிலையம், சென்னை—600018 ஆ: 21-10-1937; 1957. இ: ஆங்கிலம். ஈ: (சி) ஒரு பிடி சோறு, திருமணம், எதிர்பாராதது, நேற்று வந்தவள். எ: நைரோபி, அடிஸ்அபாபா.

949. பிரான்சிசு அந்தோணி இராசு, ஆ. (அரசு)

அ: துணைத் தமிழ்ப் பேராசிரியர்; 35 ஈ, வாத்துக்காரத்தெரு, உறையூர், திருச்சி—620003. ஆ: 5-3-1934; 1953. இ: ஆங்கிலம். ஈ: (க) மாபெரும் மறைத் தொண்டர், தமிழர்க்கொரு நீதிநூல்.

950. பிரான்சிஸ் சேவியர், சூ. (நாழையூர் இளம்பரிதி)

அ: 'இன்ப நிலையம்', கூட்டப்பனை—628651. ஆ: 16-12-1932; 1952. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள். எ: இலங்கை, சிங்கப்பூர், மாலைத் தீவுகள்.

951. பிலோமிநாதன், சிசே. (சுவாதி)

அ: இணைசார்பதிவாளர்; 84ஏ, நீடராஜப்பய்யர் தெரு, பாண்டிச்சேரி. ஆ: 10-7-1924; 1966. இ: ஆங்கிலம், பிரெஞ்சு. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

952. பிள்ளை, ஏ. எம். (மயிலை பூபதிராஜன்)

அ: ஜோதிடர்; 19, செட்டித்தெரு, பூவிருந்தவல்லி, சென்னை—600056. ஆ: 23-3-1930; 1975. இ: ஆங்கிலம். ஈ: (க) ஜோதிடக் களஞ்சியம், ஜோதிட ஆசான், கைரேகைகளும் எண் கணித முறையும், ஜோதிட அமுதம், நல்ல நாள் பார்ப்பது எப்படி, அதிர்ஷ்ட ஜோதிட கணிதம். உ: ஜோதிட கலைக்கோ.

953. பீர் முகம்மது, கு. மு. (குருபிரான் குதானந்தா)

அ: மார்க்கர், பம்பாய் துறைமுகம்; 3, பள்ளிவாசல் கீழ முதல் தெரு, பத்தமடை—627453. ஆ: 1923; 1940. இ: இந்தி. ஈ: (கவி) நறுமலர்க்கீதம். (க) ஆத்ம ஞான போதம். எ: இலங்கை.

954. பீர் முகமது. சை. (ஞானாசிரியன்)

அ: நிர்வாக இயக்குநர்; 278-பி, ஜலான் அல்போ, கோலாலம்பூர்—13-03. ஆ: 11-1-1942; 1958. இ: ஆங்கிலம். ஈ: (க) அக்கரை இலக்கியம். (சி) மணிக்கதைகள். எ: தாய்லாந்து.

955. புகழேந்தி, நா. (தமிழ்ச்சுடர்)

அ: 144, சிவந்தாகுளம் ரோடு, தூத்துக்குடி—628003. ஆ: 10-3-1930; 1949. ஈ: பல கவிதைகள்.

956. புருஷோத்தமன், த.

அ: துணைத் தமிழ்ப் பேராசிரியர்; 19, ஒற்றைவாடைத் தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை—600006. ஆ: 6-7-1936; 1966. இ: ஆங்கிலம். ஈ: (நா) கலையரசி கிளியோபாட்ரா.

957. புனிதவதி இளங்கோவன்

அ: நிகழ்ச்சி தயாரிப்பாளர், அகில இந்திய வானொலி நிலையம், சென்னை—4; 49, நான்காவது மெயின்ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை—600028. ஆ: 9-12-1938; 1958. இ: ஆங்கிலம். ஈ: (வ) பாரதத் திலகம் மோதிலால் நேரு.

958. பூங்காவனம், கு.

அ: தணிக்கையாளர், தலைமைக் கணக்கர் அலுவலகம், பெங்களூர்; 8, பெட்டிகுரு தெரு, பெங்களூர்—560001. ஆ: 16-2-1944; 1961. இ: ஆங்கிலம், இந்தி, கன்னடம். ஈ: பல ஆய்வுக் கட்டுரைகள்.

959. பூங்காவனம் ஜெகநாதன்

அ: ஆசிரியை; 6, ஜாலரன் திமாசாரி, 'காரனேஷன் பார்க், ஜோஹார் பாரு. ஆ: 1-1-1940; 1954. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல கட்டுரைகள்.

960. பூஞ்சோலை, மா.

அ: வியாபாரம்; 322, இந்தியன் கேம்ப், பீடோங், கெடா, மலேசியா. ஆ: 6-10-1936; 1953. இ: ஆங்கிலம், மலாய். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள். எ: இந்தியா, இலங்கை, சிங்கப்பூர்.

961. பூலோகசிங்கம், பொ.

அ: புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுண்ணாகம், இலங்கை. ஆ: 11-3-1951; 1970. இ: ஆங்கிலம், பிரெஞ்சு. ஈ: பல கட்டுரைகள். ஊ: உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளைத் தலைவர்.

962. பூவராகவன், ப. (செங்குட்டுவன்)

அ: ஆசிரியர்; 10, காந்திபுரம், ஆத்தூர்—636102. ஆ: 20-8-1931; 1949. இ: ஆங்கிலம். ஈ: (க) பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், அறிவியல் மனப்பான்மை, அறிவியலில் மறைக்கப்படும் தியாகங்கள்.

963. பெரியகருப்பன், இராம. (தமிழண்ணல்)

அ: தமிழ்ப் பேராசிரியர்; சதாசிவநகர், மதுரை—625020. ஆ: 12-8-1928; 1945. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (க) மொழிவழிச் சிந்தனைகள், இலக்கியத்தில் இன்பச் சுவை, பரிசில் வாழ்க்கை. (ஆ) சங்க இலக்கிய மரபு, சங்க இலக்கிய ஒப்பீடு I & II, ஆய்வியல் அறிமுகம், ஒப்பிலக்கிய அறிமுகம், குறிஞ்சிப்பாட்டுத் திறனாய்வு, ஜெயகாந்தனின் முன்னுரை இலக்கியம். (தொ) தாலாட்டு, காதல் வாழ்வு, பிறை தொழும் பெண்கள். உ: தமிழக அரசின் பரிசு பெற்றவர். எ: இலங்கை.

964. பெரியசாமி, இரா.

அ: தமிழ்த் துணைப் பேராசிரியர்; 23ஏ, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை—600033. ஆ: 12-12-1923; 1940. இ: ஆங்கிலம். ஈ: (ஆ) சிலம்புச் செல்வன். எ: இலங்கை.

965. பெரியசாமி. ப. (ஈரோடு ப. கதிரவன்)

அ: மேற்பார்வையாளர், கோவை மத்திய கூட்டுறவு வங்கி; 34பி, முனியப்பன் கோவில் வீதி, கோட்டை, ஈரோடு. ஆ: 12-4-1940; 1958. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள். (கவி) இருவர் இசைப்பாடல்கள்.

966. பெரியசாமித் தூரன், ம. ப. (பெ. தூரன்)

அ: கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் (ஓய்வு), 41, இரண்டாம் மெயின் சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை—600020. ஆ: 26-9-1908; 1924. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், இலக்கியக் கட்டுரைகள், உளவியல் நூல்கள், குழந்தை இலக்கியம், கீர்த்தனைகள். இவர் பதிப்பித்த நூல்கள் 6; 3 நூல்களை மொழி பெயர்த்துள்ளார் உ: பத்மபூஷன், கலைமாமணி, இசைப் பேரறிஞர்.

967. பெரியசுவாமி, ஒய். பி. (சூரியன்)

அ: பிராணயாமப் பயிற்சி நிலையம், ஏத்தாப்பூர்—636117 ஆ: 1-1-1947; 1967. இ: ஆங்கிலம். ஈ: (க) ஆரோக்கியமாக வாழ்வது எப்படி? சுயதொழில் செய்வது எப்படி? முதலிய 11 நூல்கள்.

968. பெரியநாயகசாமி, மி. (கொள்ளிக்கட்டை)

அ: தலைமைத் தமிழாசிரியர், அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, ஒரத்த நாடு—614625. ஆ: 2-11-1922; 1958. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (க) கல்விக் கூடத்தில் கட்டுப்பாடு.

969. பெரிய பெருமாள், அ. (குன்றக்குடி பெரிய பெருமாள்)

அ: அரசு ஊழியர்; 130-ஏ, சஞ்சீவிநாதபுரம், இராஜ பாளையம்—626117. ஆ: 13-1-1933; 1953. இ: ஆங்கிலம். ஈ: பல திறனாய்வுக் கட்டுரைகள், நாடகங்கள். எ: மலேசியா.

970. பெரியாழ்வார், ஆர்.

அ: விரிவுரையாளர், தற்கால இந்தியமொழித்துறை, கௌஹாத்திப் பல்கலைக் கழகம், கௌஹாத்தி—781014. ஆ: 13-6-1940; 1970. இ: தமிழ், ஆங்கிலம், இந்தி, வங்காளம். ஈ: (மொழி) இருளர் வாழ்வியல், நமது மொழி, தமிழ் இணைப்புப் பயிற்சி.

971. பெருமாள், அ. வை.

அ: தமிழாசிரியர்; 781, ஜாலான், ஆச்சியோங், தெலுக் கான்சன், பேராக். ஆ: 13-8-1923; 1936. இ: ஆங்கிலம், இந்தி, மலாய். ஈ: பல கட்டுரைகள். எ: இந்தியா.

972. பெருமாள், மா. (லாபிஸ் மாயவன்)

அ: தலைமையாசிரியர்; 49, ஜாலான் மூவார், லாபிஸ் ஜொகூர், மேற்கு, மலேசியா. ஆ: 10-2-1938; 1961. இ: ஆங்கிலம் மலாய். ஈ: பல பாடல்கள், கட்டுரைகள். எ: இந்தியா.

973. பெருமாள், வ.

அ: தமிழ்ப் பேராசிரியர், சொர்ண நகர், ராபர்ட்சன்பேட்டை, கோலார் தங்கவயல்—563122. ஆ: 30-9-1934; 1950. இ: ஆங்கிலம், இந்தி, கன்னடம். ஈ: (க) வாழ்க்கையும் விளையாட்டும், தமிழ் இலக்கியச் சோலை, இலக்கியமும் வாழ்க்கையும், கவிதை விருந்து. எ: மலேசியா.

974. பெருமாள், ஏ. என்.

அ: இணைப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை—600020. ஆ: 14-4-1930; 1958. இ: ஆங்கிலம், இந்தி, மலையாளம். ஈ: (கா) பனி மொழி, பால்மதி, இலக்கிய நாடகங்கள். (ஆ) தமிழ் நாடகங் களின் தோற்றமும் வளர்ச்சியும், உலக அரங்கில் நாடகம், தமிழ் நாடகம்—ஓர் ஆய்வு. எ: இலங்கை.

975. பெருமாள், பி.எஸ். (பன்னீரன்)

அ: ஆசிரியர், "ஈழநாடு" வார இதழ்; த.பெ. 49, 'ஈழநாடு' யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 21-12-1933; 1965. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

976. பெருமாள், எஸ். (நித்திலன்)

அ: தமிழ்ப் பேராசிரியர்; 21, டாக்டர் ஐடா ஸ்கடர் சாலை, வேலூர்—632012. ஆ: 17-6-1933; 1947. இ: ஆங்கிலம். ஈ: (வ) அன்பின் வடிவம் டாக்டர் ஐடா. (மொ) முறிந்த சிறகுகள். உ: மத்தியக் கல்வி அமைச்சகத்தின் பரிசு ரூ 1000 பெற்றவர்.

977. பேரம்பலம், க. (நெல்லை க. பேரன்)

அ: எழுதுவினைஞர்; காளிகோவிலடி, நெல்லியடி, கரவெட்டி, இலங்கை. ஆ: 18-12-1946; 1964. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (சி)

ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள். (பு) வளைவுகளும் நேர் கோடுகளும். எ: இந்தியா.

978. பொதியவெற்பன், வே.மு. (நப்பசலை)

அ: 20, ப. கோதண்டபாணித் தெரு, குடந்தை—612001. ஆ: 26-4-1948; 1966. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

979. பொன்மணி, எம். (உத்தமி)

அ: 5, மூன்றாவது குறுக்குத் தெரு, கிழக்கு ஷெனாய் நகர், சென்னை—600030. ஆ: 1-7-1954; 1967. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள்.

980. பொன்மணி வைரமுத்து

அ: தமிழ் விரிவுரையாளர்; 2, 5வது குறுக்குத் தெரு,டிரஸ்ட் புரம், சென்னை—600024. ஆ: 19-6-1954; 1966. இ: ஆங்கிலம். ஈ: பல கவிதைகள், கட்டுரைகள்.

981. பொன்ரத்தினம், எஸ்.

அ: வடக்கு தெரு, சாயர்புரம்—528251. ஆ: 28-2-1914; 1933. இ: ஆங்கிலம். ஈ: (நா) தாசில்தார். எ: இலங்கை.

982. பொன்ராசன், ரா. (பட்டிக்காட்டுப் பாவலன்)

அ: ஆசிரியர்; முத்துராமலிங்கபுரம், (வழி) அருப்புக் கோட்டை—626105. ஆ: 6-7-1927; 1949. இ: ஆங்கிலம். ஈ: (கவி) பாப்பாப் பாட்டு, தாத்தாப்பாட்டு, இளைய பாரதம், தலைமுறை.

983. பொன்னம்பலம்

அ: ஆசிரியர்; 92, கம்போங் செந்தோசா, சுங்கை சிப்புட்(வ), பேராக், மேற்கு மலேசியா. ஈ: (க) முத்தொள்ளாயிரக் காட்சிகள், கம்பனெங்கே ரஹீமெங்கே. (சி) மனப்பிராந்தி.

984. பொன்னம்பலம், க. (தில்லையடிச் செல்வன்)

அ: வியாபாரம்; 36, மன்னார் வீதி, புத்தளம், இலங்கை. ஆ: 5-6-1953; 1970. இ: ஆங்கிலம், சிங்களம். ஈ: (கவி) சமுதாய வீதியிலே.

985. பொன்னரசு, இரா.

அ: தமிழ்ப் பேராசிரியர்; சி-57, மகாராச நகர், பாளையங் கோட்டை. ஆ: 26-6-1927; 1967. இ: ஆங்கிலம், இந்தி. ஈ: (க) கல்லூரிக் கட்டுரைகள். (வ) தமிழ் இலக்கிய வரலாறு, அரசியல் மாவீரர் ஜான் எஃப் கென்னடி. எ: இலங்கை.

986. பொன்னியின் செல்வன், சு. (பொன்னிநாடன்)

அ: தமிழாசிரியர்; திருவேதிகுடி, கண்டியூர் அஞ்சல்—613202. ஆ: 6-1-1947; 1964. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: பல சிறுகதை கள், கவிதைகள். (தொ) தமிழருவி, காதல் மழை, நெஞ்சத்தில் அண்ணா.

987. பொன்னுச்சாமி, செ. (கலைக்கண்ணன்)

அ: விவசாயம்; மேலாண்மறை நாடு, வெம்பக்கோட்டை (வழி), முகவை மாவட்டம். ஆ: 20-7-1954; 1969. ஈ: பல சிறு கதைகள்.

988. பொன்னுசாமி, அருணா.

அ: தமிழாசிரியர்; தாத்தையங்கார் பேட்டை, திருச்சி மாவட்டம். ஆ: 4-10-1938; 1962. இ: ஆங்கிலம். ஈ: (கவி) பெண்மை. எ: இலங்கை.

989. பொன்னுசாமி, செ. (சிந்தனை)

அ: தமிழ்ப் பேராசிரியர்; 22-பி, அருளானந்தநகர், தஞ்சாவூர் – 613007. ஆ: 15-7-1921; 1945. இ: ஆங்கிலம். ஈ: (க) சூளாமணி, சாக்கியமுனி, இருமுனை. (ஆ) ஊடலில் பெண்கள், இலக்கியத்தில் சிலர். (தொ) ஆறுமணி நேரம், பல்சுவை.

990. போத்தையா, எஸ்.எஸ்.

அ: ஆசிரியர்; தங்கம்மாள்புரம், சூரங்குடி அஞ்சல், நெல்லை மாவட்டம். ஆ: 8-5-1933; 1951. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: (க) தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள், தமிழர் நாட்டுப் பாடல்கள்.

991. மக்பூல், எம். (கண்ணிமை)

அ: வியாபாரம்; 11, எ.கே.இ. தெரு எண் 1, திருச்செங்கோடு, சேலம் மாவட்டம். ஆ: 5-5-1927; 1942. இ: ஆங்கிலம், தமிழ், அரபு. ஈ: பல சிறுகதைகள்.

992. மகாதேவன், கதிர்.

அ: தமிழ் விரிவுரையாளர், அஞ்சல் வழிக் கல்வித்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-625021. ஆ: 15 9-1936; 1975. இ: ஆங்கிலம். ஈ: (க) ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம்.

993. மகாதேவா, கே.ஜி. (மகான்)

அ: பத்திரிகையாளர், "ஈழநாடு" அலுவலகம், த.பெ. 49 யாழ்ப்பாணம், இலங்கை. ஆ: 6-8-1940; 1952. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள். எ: இந்தியா.

994. மகாலிங்கம், கி. (பகீரதன்)

அ: பத்திரிகை ஆசிரியர்; 50, 7வது குறுக்குத் தெரு, ஷெனாய் நகர், சென்னை—600030. ஆ: 18-12-1919; 1945. இ: ஆங்கிலம். ஈ: (பு) தேன்மொழியாள், உழைப்பால் உயர்ந்த ஏழை, முல்லை வனத்து மோகினி. (சி) கைதி சொன்ன கதை. (வ) அழகப்பரின் அதிசய சாதனைகள். (க) வடஇந்திய யாத்திரை, ஈழநாட்டுப் பிரயாணம், பாதாள நீரோடை. எ: இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான்.

995. மகாலிங்கம், நா.

அ: தொழிலதிபர்; புனிதமேரி சாலை, சென்னை—600018, ஆ: 21-3-1923; 1963. இ: ஆங்கிலம், இந்தி, வடமொழி. ஈ: (க) கம்பன் புகழ், நாட்டுக்கு நல்லவை, சர்க்கரை தொழில் பற்றிய சிந்தனைகள், திட்டம் பற்றிய சிந்தனைகள், சிந்தனை மலர்கள், தொழில்களும் போக்குவரததும் பற்றிய சிந்தனைகள். ஊ: இராமலிங்கர் பணிமன்றம், சன்மார்க்க சங்கம், பாரதியார் சங்கம் ஆகியவற்றின் தலைவர். எ: இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ஜப்பான், ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர் இலங்கை.

996. மகாலிங்கம், எஸ். (லிங்கன்)

அ: அரசு ஊழியர்; மேல அரியப்புரம், மேட்டூர் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம். ஆ: 1940; 1970. இ: ஆங்கிலம். ஈ: பல சிறுகதைகள்.

997. மகாலிங்கம், வி.ஆர். (சாலை இளந்திரையன்)

அ: தமிழ்ப் பேராசிரியர்; 9 ஏ/டபிள்யு. ஈ.ஏ., கரோல்பாக், புது தில்லி—110005. ஆ: 6-9-1930;1946. இ: ஆங்கிலம், இந்தி. ஈ:

(கவி) இளந்திரையன் கவிதைகள், அன்னை நீ ஆடவேண்டும், சிலம்பின் சிறுநகை, காலநதி தீரத்திலே, பூத்தது மானுடம், கொட்டியும் ஆம்பலும், வீறுகள் ஆயிரம், நஞ்சருக்குப் பஞ்சணையோ, நடைகொண்ட படைவேழம். (க) சிந்தனைக்கு, உலகம் ஒரு குடும்பம், உலகத் தமிழ், தமிழுக்காக, கூட்டின் அமைதி குலைகிறது, நம்மைப் பற்றிய சிந்தனைகள், காலத்தின் கேள்விகள், தமிழ் மாநாடு, எங்கள் பயணங்கள், ஏன் இந்த மெத்தனம், மக்கள் நாயக மரபுகள், கேள்விகள் ஆயிரம், களத்திலே கடிதங்கள். (ஆ) புரட்சிக் கவிஞர் கவிதை வளம், புதிய தமிழ்க்கவிதை, தமிழில் சிறுகதை, சிறுகதைச் செல்வம்,புதுத்தமிழ் முன்னோடிகள், சமுதாய நோக்கு, புதுத்தமிழ் முதல்வர்கள், சமுதாய நோக்கில் பழமொழிகள், புரட்சி முழக்கம், புதிய தளத்தில் புரட்சிக் கவிஞர். உ: தமிழில்சிறுகதை எனும் நூலுக்குப் பவல் அன்மோர்ஹெட் பரிசு. ஊ: உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம், அறிவியக்கப் பேரவை, தமிழ் எழுத்தாளர் சங்கம் (தில்லி) ஆகியவற்றின் நிறுவகத் தலைவர். இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், உலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஆகியவற்றின் நிறுவக உறுப்பினர். எ: இலங்கை, சிங்கப்பூர், மலேசியா.

998. மகேசன், கே.எஸ்.

அ: 4, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12, இலங்கை. ஆ: 1-5-1934; 1956. இ: ஆங்கிலம். ஈ: (பு) அந்தரத்தீவு. உ: இலங்கை சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவர். எ: இந்தியா.

999. மகேசுவரி, ந. (மாங்கனி)

அ: ஆசிரியை; 474, ஜாலான் ராயா பாராட், கிள்ளான். ஆ: 1938; 1958. இ: ஆங்கிலம், இந்தி, மலாய். ஈ: (சி) அன்பு இதயம், மறவேன் உன்னை.

1000. மங்கள முருகேசன், ந. க. (மங்களம்)

அ: துணைப்பேராசிரியர்; 13/3, பீட்டர்சாலைக் குடியிருப்பு, சென்னை—600014. ஆ: 15-6-1943; 1967. இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: பல சிறுகதைகள். (வ) இந்திய வரலாறு I&II, இந்தியச் சமுதாய வரலாறு, இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு (1707 வரை). (மொ) பண்டைய இந்தியச் சமுதாயப் பொருளாதார விளக்கம்.

1001. மங்களராசு, இரா.

அ: தமிழ்த் துணைப்பேராசிரியர், மன்னர் கல்லூரி, புதுக் கோட்டை—622001. ஆ: 25-3-1939; 1965; இ: ஆங்கிலம், மலையாளம். ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

1002. மஞ்சுளா குமரப்பபிள்ளை (ஜெபம். பவதாரிணி)

அ: மே/பா. டாக்டர் இ. குமரப்பபிள்ளை, மாவட்டவைத்திய அதிபர் இல்லம், மன்னார், இலங்கை. ஆ: 15-3-1959; 1976. இ: ஆங்கிலம். ஈ: சிறுகதைகள்,

1003. மணவாளன், கா. சே. (திருமாலடியான்)

அ: தலைமையாசிரியர் (ஓய்வு); 52, 6வது மெயின் ரோடு, 3வது குறுக்குத் தெரு, தண்டீஸ்வரர் நகர், வேளச்சேரி, சென்னை-600042. ஆ: 4-6-1906; 1935. இ: ஆங்கிலம். ஈ. (நா) சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. (க) திருமாலடியார்கள், இராமாநுசர்.

1004. மணி, கி. (சிவகாமி மணியன்)

அ: ஆசிரியர்; சோமலாபுரம், மடவானம்—635 653. ஆ: 9-11-1950; 1968. இ: ஆங்கிலம், தெலுங்கு. ஈ: பல சிறுகதைகள், கவிதைகள்.

1005. மணி, பெ. சு.

அ: 3-பி, இராமகிருஷ்ணபுரம், 2வது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600033. ஆ: 2-11-1933; 1960. இ: ஆங்கிலம், இந்தி, ஈ: (க) இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழர் கண்ட விவேகாநந்தர்.

1006. மணி, பி. எஸ். (பசுமண்)

அ: ஆசிரியர்; 6, மதிநகர், கணியூர் அஞ்சல், கோவை மாவட்டம். ஆ: 14-1-1935; 1952. இ: ஆங்கிலம். ஈ: பல கட்டுரைகள், கவிதைகள்.

1007. மணி, எஸ். எஸ்.

